# எதிரொலி
ஆஸ்திரேலியா
ETHIROLI

குரல் 08 அதிர்வு 87 புரட்டாதி 2024 editor@ethiroli.com தொ.பே:1800 960 162









படம்: லெபோன்










ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் தமிழ் மாத இதழ்

# ROYAL INTERNATIONAL MONEY TRANSFERS

EASY • FAST • SAFETY

## நாணயமிக்க பணப்பரிமாற்றம் ‘டன்டிநொங்’ இல் புதியதோர் சேவை

BOC
PEOPLE'S BANK
COMMERCIAL BANK
HNB
Sampath Bank
UNION BANK
Amãna Bank It's Your Bank

Same day bank transfer

No One Beat Our Rate

THE HUB ARCADE
4/131-147, Walker Street, Dandenong VIC 3175

(03) 87649143 0406409403
royalinfomoney@gmail.com


KUMARAN'S
Cafe
Enjoy the
South Indian
Favourites
IDLI | DOSA | VADA | BAJJI
A Complete Vegetarian Restaurant
Call Us For Orders
0413 306 575
RIVERDALE VILLAGE PLUS SHOPPING CENTRE
200, HUMMINGBIRD BOULEVARD, TARNEIT, VIC - 3029.


SAME DAY DELIVERY SERVICE க்கு
தங்களின் அமோக வரவேற்புக்கு
எங்களின் அன்பு நன்றிகள்
SRI KUMARAN
our local store
Whatsapp us 0421 255 557
We have now expanded our services to
CBD | POINT COOK | MANOR LAKES | WERRIBEE | TARNEIT
உங்களின் ஆதரவு! எங்களின் உத்வேகம்!!
OUR STORES
SHEPPARTON | TARNEIT | CLYDE NORTH | NARRE WARREN | CARRUM DOWNS
info@srikumaran.com.au
www.srikumaran.com.au

# ஆப்கானில் போர்க்குற்றம் இழைத்த ஆஸி. படையினரின் பதக்கங்கள் பறிப்பு!



●ஐங்கரன் விக்கினேஸ்வரா

**(ஆப்கானிஸ்தானில் போர்க்குற்றம் இழைத்தனர் என குற்றம் சாட்டப்பட்டு ஆஸி படைகளில் பணியாற்றிய இராணுவத் தளபதி களின் பதக்கங்கள் பறிக்கப்பட்டுள்ளதாக அவுஸ்திரேலியாவின் பாதுகாப்பு அமைச்சர் ரிச்சர்ட் மார்லஸ் தெரிவித்துள்ளமைக்கு, படைத்தரப்பில் பலத்த கண்டனங்கள் எழுந்துள்ளன)**

ஆப்கானிஸ்தானில் 2005 மற்றும் 2016 க்கு இடையில் அவுஸ்திரேலிய சிறப்புப் படைகளின் தவறான நடத்தைக்கு தளபதிகளை பொறுப்பேற்க வேண்டும் என்பது மேஜர் ஜெனரல் பால் பிரேரட்டனின் (Paul Brereton) போர்க்குற்ற விசாரணையில் பரிந்துரைக்கப்பட்டு உள்ளது.

39 ஆப்கானியர்களின் சட்டவிரோத கொலைகளில் சுமார் 25 அவுஸ்திரேலிய சிறப்பு சேவை படைப்பிரிவு மற்றும் கமாண்டோ ரெஜிமென்ட் துருப்புக்கள் ஈடுபட்டதாக அவர் கண்டறிந்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் போர்க்குற்றம் செய்ததாக குற்றம் சாட்டப்பட்ட பல முன்னாள் அவுஸ்திரேலிய இராணுவத் தள பதிகளின் பதக்கங்கள் பறிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சர் ரிச்சர்ட் மார்லஸ் (Richard Marles) 11/9/24 இல் தெரிவித்துள்ளார்.

பிரெட்டன் அறிக்கைக்கு உட்பட்ட குற்றச்சாட்டுகள், இந்நாட்டு வரலாற்றில் அவுஸ்திரேலிய போர்க்குற்றங்கள் பற்றிய மிகக் கடுமையான குற்றச்சாட்டுகள் என்று மார்லஸ் நாடாளுமன்றத்தில் கூறினார்.

போர்க்குற்றங்கள் நடந்ததாகக் கூறப்படும் காலக்கட்டத்தில் அவர்கள் செய்த சேவைக்காகப் பெற்ற பதக்கங்களை மீளப் பெற அந்தப் படைகளின் தளபதிகளுக்கு கோரியுள்ளார். ஆயினும் தனியுரிமை காப்பு சட்டங்களை மேற்கோள்காட்டி எத்தனை பேருக்கு அவர் கடிதம் எழுதியுள்ளார் அல்லது அவர்களின் தரவரிசையை அடையாளங்களை அவர் காட்டவில்லை.

இதேவேளை தளபதிகளின் பதக்கங்கள் அகற்றப்பட்டதை அவுஸ்திரேலிய சிறப்பு விமான சேவை சங்கத்தின் தலைவர் மார்ட்டின் ஹாமில்டன்-ஸ்மித் கடுமையாக கண்டனம் செய்தார். இது ஆப்கானிஸ்தானில் பணியாற்றிய வீரர்களின் தைரியம் மற்றும் தியாகத்திற்கு துரோகம் என அவர் விபரித்துள்ளார்.

ஆப்கானில் எங்கோ ஒரு தொலைதூர கிராமத்தில் இந்த தள பதிகள் பார்க்காத மற்றும் அறியாத, அவர்களின் கண்காணிப்பில் இல்லாத ஒரு சட்டவிரோத செயல் நடந்திருக்கலாம். நிரூபிக்கப்படாத குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் போர்க்களத்தில் இந்த இளம் அதிகாரிகளின் தைரியமான தலைமையை அரசாங்கத்தின் முடிவு கவனிக்கவில்லை என்று ஹாமில்டன்-ஸ்மித் தனது அறிக்கையில் காட்டமாக தெரிவித்துள்ளார்.

ஆயினும் அதிகாரிகளின் தவறுகள் மட்டுமின்றி, போர்க் குற்றம் காரணமாகவே பதக்கங்கள் பறிக்கப்பட்டன என்று அமைச்சர் மார்ல்ஸ் பின்னர் விளக்கி கூறியுள்ளார்.

உண்மையில் அங்கே என்ன நடந்தது என்று தெரியும். அதைப் பற்றி அறிந்திருந்தோம். எனினும், அப்போதைய அரசு உடனடியாக செயல்படவில்லை அல்லது பரிந்துரைக்க வில்லை. அதுவே பிரச்சினை என்று அமைச்சர் மார்ல்ஸ் செய்தியாளர்களிடம் கூறினார்.

2013 இல் ஆப்கானிஸ்தானில் ஆஸி துருப்புக்களுக்கு ஞயுளு கேப்டனாக கட்டளையிட்டவரும், தற்போதைய எதிர்க்கட்சி சட்டமியற்றுபவர் ஆண்ட்ரூ ஹாஸ்டி, (Opposition lawmaker Andrew Hastie) போர்க் குற்றங்களுக்கு அவுஸ்திரேலிய அரசி யல் தலைவர்களும் இராணுவ தலைமையும் பொறுப்பேற்க வேண்டும் என்றார்.

இக்குற்றச்சாட்டுகளால் அவுஸ்திரேலிய துருப்புக்கள் தார்மீக தைரியம் இழந்து ஏமாற்றமடைந்தனர் என்று நான் நம்புகிறேன். இது கான்பரா வரை அனைத்து வழிகளிலும் கண்டனங்களுடன் சென்றுள்ளது என்று ஹஸ்டி கூறினார்.

அக்காலத்தில் ஆப்கானிஸ்தானில் அவரது இராணுவ சேவைக்காக ஹஸ்டி அங்கீகரிக்கப் படவில்லை. அதனால் பதக்கங்கள் பறிக்கப்பட்ட அதிகாரிகளில் அவர் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

அப்பாவிகளின் இரத்தத்தை சிந்தியதாகக் கூறப்பட்டவர்கள் மட்டுமே அதற்குப் பொறுப்பு. யாரையும் மன்னிக்கவோ அல்லது கண்டிக்கவோ நான் இதைச் சொல்லவில்லை என்றும் ஹஸ்டி கூறினார். 2023 ஆம் ஆண்டில், முன்னாள் SAS வீரர் ஆலிவர் ஷுல்ஸ் போர்க் குற்றம் சாட்டப்பட்ட இந்த வீரர்களில் முக்கியமானவர். 2012 இல் ஆப்கானில் உருஸ்கான் மாகாணத்தில் கோதுமை வயலில் ஒரு தீவிரவாதியை சுட்டுக் கொன்றதாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டது.

கடந்த ஆண்டு அவுஸ்திரேலியாவின் மிகவும் அங்கீகரிக் கப்பட்ட வாழும் போர் வீரர் பென் ராபர்ட்ஸ்-ஸ்மித் SAS கார்போரல் ஆக இருந்தபோது நான்கு ஆப்கானியர்களை சட்டவிரோதமாக கொன்றிருக்கலாம் என்று ஒரு சிவில் நீதிமன்றம் கண்டறிந்தது. அவர் மீதும் இதுவரை போர்க்குற்ற கிரிமினல் குற்றம் சாட்டப்படவில்லை.

இதுவரையில் ஆப்கானிஸ்தானில் போர்க்குற்றத்தில் ஈடுபட்டதாக எந்த அவுஸ்திரேலிய வீரர்களும் தண்டிக்கப்பட வில்லை. ஆனால் அவுஸ்திரேலிய போர்க்குற்றங்கள் பற்றிய குற்றச்சாட்டுகளை அம்பலப்படுத்திய இரகசிய தகவலை ஊடகங்களுக்கு கசியவிட்டதற்காக முன்னாள்




இராணுவ வழக்கறிஞருமான டேவிட் மெக்பிரைடுக்கு மே மாதம் கிட்டத்தட்ட ஆறு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

ஆப்கான் போர்க்குற்றங்களை வெளியிட்ட இராணுவ வழக்கறிஞரான டேவிட் மக்பிரைட்டி அங்கு இரண்டு சுற்றுப் பயணங்களைச் செய்திருந்தார். ஆப்கானிஸ்தான் குடிமக்கள் கொல்லப்பட்டனர் என்பதனை அவரே முதன்முதலில் வெளிப்படுத்தினார். ஆயினும் அவர் இராணுவ இரகசியங்களை திருடி வெளியிட்டார் எனவும் குற்றஞ்சாட்டப்பட்டார். இத்தகவலை அம்பலப்படுத்தியதை மக்பிரைட் கடந்த வருடம் ஏற்றுக் கொண்டிருந்தார்.

தற்போது ஆப்கானிஸ்தானில் அவுஸ்திரேலியாவின் போர்க்குற்றங்களை அம்பலப்படுத்திய சட்டத்தரணி டேவிட் மக்பிரைட்டிற்கு அவுஸ்திரேலிய நீதிமன்றம் ஐந்து வருடங்கள் 8 மாதம் சிறைத்தண்டனை விதித்துள்ளது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த விசாரணைகளின் போது அவுஸ்திரேலிய படையினர் ஆப்கானிஸ்தானில் 38 பொதுமக்களை கொலை செய்தமை தெரியவந்தது.

இவர் எவ்வித துன்புறுத்தலை எதிர்கொண்டவர் அல்ல என்றாலும், தற்காலத்தில் சிறையில் அடைக்கப்பட்ட முதல் அவுஸ்திரேலிய விசில்ப்ளோவர் (Whistle Blower) ஆவார். ஜனநாயக நாட்டில் உண்மையை தெரிவிப்பது தனது தார்மீக கடமை என தான் கருதியதாக டேவிட் மக்பிரைட் தெரிவித்துள்ளார்.



# SPICES & Things

SST

**Indian | Sri lankan | South Asian**

Groceries & Take away

At SST Spices & Things, we pride ourselves on delivering top-notch customer service and offering high-quality food and groceries. Whether you're picking up your favorite spices, fresh produce, or delicious takeaways, we've got you covered!




## 7 days

## 10 am to 8 pm

**SST Spices & Things Where quality meets community**

**Location:**
79 McIntyre Rd,
Sunshine North VIC 3020

**Contact:**
03 9417 2517

**Email:**
sstspicesnthings@gmail.com

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI
குரல்:07 அதிர்வு: 85 புரட்டாதி 2024 தொ.பே:1800 960162

## போராட்டம் அகதிகளுக்கானதே!

ஆஸ்திரேலிய அரசின் தேர்தல் கால வேடிக்கைகளில் ஒன்று, அகதிகளின் பெயரில் எப்போதும் எழுதி வைக்கப்பட்டே இருக்கும். அதில் எவருக்கும் எந்தவொரு ஐயப்பாடும் இல்லை என்பதை அகதிகளின் கூக்குரல்கள் மீளவும் உறுதிப்படுத்துகின்றன.

அந்த வகையில் ஆஸ்திரேலியாவின் பெரும் நகரங்களில் எல்லாம் அகதிகளின் அவலக்குரல் இம்முறையும் ஒலிக்கத்தொடங்கிவிட்டது. அதுமட்டுமின்றி இம்முறை அகதிகளின் இறப்புகளால் எழும் ஒப்பாரிகளும் நெஞ்சைக் கனக்க வைக்கின்றன.

நிரந்தர வதிவிடம் கோரி மெல்பேர்ணில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போராட்டம் 60 நாள்களைக் கடந்து சென்று கொண்டிருக்கும் தருணத்தில் இக்காலப்பகுதியில் 3 அகதிகளின் உயிர்கள் பறிபோயுள்ளமை உணர்வுள்ள தமிழர்களின் மனங்களை காயப்படுத்தியுள்ளதென அவர்களின் பரவலான உரையாடல்களில் தெரியவருகின்றது. கடந்த 60 நாள்களில் உதயன், மனோ மற்றும் சசி ஆகிய அகதிகளின் உயிர்கள் பறிபோயுள்ளமை ஆஸ்திரேலிய அரசின் வாக்கு அரசியலில் உள்ள மனிதாபிமானமற்ற செயலையே வெளிப்படுத்தியுள்ளது.

60 நாள்களாக மெல்பேர்ணில் போராடும் அகதிகளை எட்டிப்பாராத ஆஸ்திரேலிய உள்துறை அமைச்சர், சிட்னியில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டத்தை எட்டே நாளில் எட்டிப்பார்த்துள்ளார் என்றால் , அது அவர் அகதிகள் மீது கொண்ட கருணையால் அல்ல. மாறாக தனது தொகுதி மக்களால் தனக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை சீர்செய்யவே அவர் முற்பட்டுள்ளார்.

அமைச்சரின் இந்த அரசியல் விளையாட்டுத் தொடர்பில் புரிதல் இல்லாத – லேபர் கட்சிக்கு கம்பு சுத்தும் சிலர் , 'அமைச்சரே வந்து எவ்வளவு தாழ்மையாக சொல்லுகிறார் , பிறகு ஏன் இவர்கள் தொடர்ந்து போராடுகிறார்கள்?' என்ற கேள்வியையும் எழுப்பாமல் இல்லை.

அதுமட்டுமின்றி அகதிகளுக்காக போரட்டங்களை முன்னெடுப்பவர்கள், அவர்களின் ஒற்றை மூளைக்குள் இருக்கும் ஒரேயொரு வழிமுறையை மட்டும் நம்பியிராது அகதிகளுக்கு பலன் ஏற்படக்கூடியவகையில், பொருத்தமான பொறிமுறைகளைக் கண்டறிந்து செயற்படுவதே சால சிறந்தது.

கன்பராவில் நடந்த அகதிகள் போராட்டத்தில், அகதிகள் செயற்பாட்டளார் ஒருவர் மீது சிட்னியில் இருந்து வந்த இன்னொருவர் தன்னுடம் கூட நின்ற அகதிகளை வைத்து தாக்குதல் நடத்தியிருந்தார். அது போலவே தற்போது சிட்னியில் நடந்து கொண்டிருக்கும் போராட்டத்துக்கான உணவுப்பொதியோடு சென்ற ஒரு பெண் செயற்பாட்டாளர் மீது அங்கு போராட்டத்தை நடத்தி வரும் ஒருவர் வசைபாடியிருக்கிறார். ஆகவே உளமார இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கின்றீர்கள் என்றால். உங்களுக்குள் உள்ள தனிப்பட்ட கோப தாபங்களை இப்போராட்டத்திற்குள் நுழைக்காமல் இருப்பதே மேன்மையானது. மாறாத தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சிகளை, ஏதிலிகள் எல்லோருக்குமான மீட்சிக்காக நடைபெறும் போராட்டத்துக்குள் புகுத்தினால், அது அந்தப் போராட்டத்தையே திசைதிருப்பி நாசமாக்கிவிடும். இதனை அனைவரும் புரிந்து கொள்வதே ஏதிலிகளின் போராட்டத்தை இன்னும் வீரியமாக்க உதவும்.

# பரம்பொருளும் தன் வாயால் கெடும்

● ஆர்.சுகந்தன்

**'இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்**
**பொருள்சேர் புகல்புரிந்தார் மாட்டு.'**



*இந்த திருக்குறளைப் பற்றிய சரியான புரிதல் இல்லாத காரணத்தால் தமிழகத்தில் கடந்த இரண்டு வாரங்களாக சமூக வலைத்தளத்தில் மிகப்பெரிய சர்ச்சையொன்று உருவாகியுள்ளது. இறைவனின் திருவடிகளைச் சேர்ந்து சரணடைந்தவர்களிடத்து இருள் ஆகிய விதி தருகின்ற நன்மையும் தீமையும் ( இருவினை ) சேர்வதில்லை என்பதுதான் சரியான பொருளாக இருக்க முடியும் .ஆனால் பொதுவான திருக்குறள் தெளிவுரைகள் யாவும் இந்த இருவினை என்பது நல்வினை மற்றும் தீவினை என்ற பிறவிப்பயனால் வரக்கூடிய துன்பங்களிலிருந்து மீள்வதற்கு இறைவனின் திருவடிகளில் சரண் அடையவேண்டும் என்பதையே தெரிவிக்கின்றன. இத்துணை நாள் திருக்குறள் மற்றும் சித்தர் வாக்கு என்று சிங்கியடித்து மக்களை தன் பேச்சுத்திறமையால் வசியம் செய்து கொண்டிருக்கிறார் "அசத்தப் போவது யாரு புகழ்" மகா என்கிற நமது பரம் மகாவிஷ்ணர்( சுவாமிஜியை மகாவிஷ்ணு என்று மரியாதைக்குறைவாக கூறக்கூடாதல்லவா, ஆதலால் விஷ்ணர் )*

*சிறு வயதில் சன் தொலைக்காட்சியில் ஒளிபரப்பான 'அசத்தப்போவது யாரு' நிகழ்ச்சியில் ஸ்டாண்ட் அப் காமெடியனாக மதுரை மகா என்ற பெயரில் கலக்கியவர் பிறகு தமிழ்த் திரைப்படம் ஒன்றை இயக்க முற்பட்டு அந்த முயற்சி பலனளிக்காமல் போகவே காஞ்சிபுரத்தில் வாழ்ந்த விசுவநாதசுவாமி என்பவரின் சீடராகி ஆன்மீகப் பாதையை தேர்ந்தெடுக்கிறார். திருப்பூர் மாவட்டத்தில் பரம்பொருள் அறக்கட்டளை என்ற பெயரில் தொண்டு நிறுவனம் நடத்தி வந்த மகா விஷ்ணு ,தனது பேச்சாற்றலினால் ஆன்ம தேடலுக்கு வழிகாட்டுவதாக கூறி கட்டண வகுப்புகளை நடத்தி வருகிறார். இதைத் தவிர அவரவர் தனிப்பட்ட பிரச்சினைகளுக்கு ஏற்ப நேரடித் தீர்வும் தருகிறவர் நமது மகாவிஷ்ணர். இது மட்டுமின்றி இவரது அமைப்புக்கு சிங்கப்பூர்,மலேசியா, இலங்கை மற்றும் ஆஸ்திரேலியாவில் ( மெல்பேர்ன் ) கிளைகளும் உண்டு.*

*கடந்த ஒகஸ்ட் மாதம் சென்னையில் உள்ள அரசுப்பள்ளியில் நடந்த ஆன்மீக அல்லது விழிப்புணர்வு கூட்டத்தில் வாதத்திறமையை காட்டிய மகாவிஷ்ணு ,தனது பரபரப்பு காணொளியினால் தன் தலையிலேயே மண்ணள்ளிப் போட்டுக்கொண்டார். மாணவிகளின் முன்னே "மாற்றுத் திறனாளிகள் குறைபாடுகளுக்கு முன் ஜென்மத்தில் செய்த பாவம் தான் காரணம். மற்ற பிறவிகளில் செய்த பாவங்களால் தான் மறுபிறவி கிடைக்கிறது. போன ஜென்மத்தில் பாவம் செய்தவர்கள்தான் இந்த ஜென்மத்தில் மாற்றுத் திறனாளிகளாகவும் ஏழைகளாகவும் பிறக்கிறார்கள். அதேபோல, கால், கை இழந்து, கண் பார்வையற்றவர்களாக பிறப்பதற்கும் பாவங்கள் தான் காரணம்" என்று பேசினார் பரம்பொருள். அப்பொழுது அவரது பேச்சை எதிர்த்த மாற்றுத் திறனாளி ஆசிரியரான சங்கருக்கும் மகாவிஷ்ணுவுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி பல்வேறு தரப்பில் இருந்தும் பகுத்தறிவு திராவிட விடியல் ஆட்சியில் பள்ளிகளில் ஆன்மீக பிரசாரமா என கண்டனங்கள் எழுந்தன. இதற்குப் பதிலளித்த அமைச்சர் மகேஷ் அன்பில் பொய்யாமொழி " எனது ஏரியாவில் வந்து எப்படி இப்படி பேசலாம்? " என பேட்டை ரௌடி போல் சவால் விடுத்தார். இதற்காகவே காத்துக்கிடந்த தமிழக சங்கிகள் "இது இந்து மதத்திற்கு எதிரான சதி , இதுபோல் மற்ற மதத்தினர் பிரசாரக்கூட்டம் நடத்துவதை திமுக தடுக்குமா?" என்று பதிலுக்கு சமூக ஊடகங்கள் தோறும் வீர முழக்கமிட்டனர். இதற்கிடையே ஆஸ்திரேலியாவிலிருந்து ஊருக்கு திரும்பிய பரம்பொருள் கைது செய்யப்பட்டு செப்ரெம்பர் 20ஆம் திகதி வரை காவலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.*


*இந்த குழப்பங்களுக்கிடையில் தெளிவாக யோசிக்க வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது அல்லவா ?. இப்படி பேசியது மகாவிஷ்ணரின் குற்றமா ? . இதுநாள் வரை அவர் கடைபிடித்துவந்த கோட்பாட்டின் படி அவரளவில் தவறு கிடையாது. மாற்றுத்திறனாளியை இழிவாக நடத்தினார் என்று சொல்கிறார்கள் . அந்தக் காணொளியைப் பார்த்த வரையில் அப்படி ஒன்றும் தெரியவில்லை. அவரின் ஒவ்வொரு பேச்சிற்கும் அங்கே பலத்த கைதட்டல். அங்கே பணிபுரிந்த எவரும் மகாவிஷ்ணருக்கு எதிராக பேசவில்லை. நிலைமை மோசமான பிறகே கண்டனம் மற்றும் கைது எல்லாம். இந்த அரசுப் பள்ளிகளில் கழக அமைச்சர்கள் வருகை தரும்போது நடக்கும் கூத்தாட்டங்கள் எல்லாம் கண்ணுக்கு தெரியவில்லையா? கடந்த கழக ஆட்சிகளில் குண்டர்களால் தாக்கப்பட்டு உயிரிழந்த ஆசிரியர்கள் , மாணவர்கள் எத்துணை பேர் ? . இந்திய நீதியமைப்பு சட்டம் 28/1 கீழ் " முழுக்க முழுக்க அரசு நிதியில் இருந்து பராமரிக்கப்படும் எந்த ஒரு கல்வி நிறுவனத்திலும் மத போதனை வழங்கக்கூடாது". பரம்பொருள் மதபோதனை வழங்கினாரா ? இல்லையே திருக்குறளிலிருந்து மேற்கோளைக் கூறினார். கழக ஆட்சியில் ஓடும் அனைத்து பேருந்துகளிலும் திருக்குறளும் ,தெளிவுரையும் இருக்கிறதே. அது ஆன்மீக / மத போதனையில் சேராதா? அதற்காக பரம்பொருள் செய்தது சரி என்று சொல்லவில்லை. அதற்காக அவரை ஆசிரியர் சங்கரிடம் மன்னிப்புக் கேட்கச் செய்திருக்க வேண்டும்.*

(07ஆம் பக்கம் பார்க்க)

## வாசகர் களம்

எதிரொலியில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்கள் குறித்து வாசகர்களின் கருத்துகள் எதிர்பார்க்கப்படுகின்றன. காத்திரமான கருத்துகள் பிரசுரிக்கப்படும். அதுமட்டுமின்றி எதிரொலி பேசாத சமூக கருத்துகளையும் எழுதி அனுப்புங்கள்.

நன்றி
ஆசிரியர்பீடம், எதிரொலி



editor@ethiroli.com
PO Box 6313, Dandenong
Victoria 3175

# என்ர கணவரின் சடலத்தை அனுப்பி வையுங்கோ

## ஒரு கண்ணீர்க்கோரிக்கை

● ஜே.ஜே.




“அவருடைய வாழ்வில் அவர் எவ்வித சந்தோஷத்தையும் அனுபவித்ததில்லை. அவர் பிள்ளைகளுடன் கூடியாடித் திரிய எங்கட நாடும் அவரை அனுமதிக்கவில்லை”- இவ்வாறு அண்மையில் உயிரைவிட்ட சசிகரனின் மனைவி தனது கவலையை எதிரொலி-யிடம் வெளியிட்டார்.

இம்மாதம் முற்பகுதியில் விக்டோரியாவின் தென்கிழக்கு பகுதியில் டவுன்டன் பகுதியில் வாழ்ந்து வந்த சசிகரன் என்ற 44 வயது அகதிக் கோரிக்கையாளர் மறைந்து போனார். அவரின் மனைவியே மேற்கண்டவாறு தமது மன வேதனையை வெளிப்படுத்தியுள்ளார்.

சுமார் 12 வருடங்களுக்கு முன்னர் ஆஸ்திரேலியாவுக்கு வந்தவர்களில் பலர் நிரந்தர வதிவிட விசா மற்றும் குடும்பங்களின் பிரிந்து மனவேதனையுற்ற நிலையில் வாழ்ந்து வருகின்றனர். இந்தத் துயர் மிக்க வாழ்க்கையில் தங்களது உயிரை பிடித்தவாறுள்ள அகதிகளுக்கு மத்தியில் சிலர் மடிந்து கொண்டிருக்கும் நிலை ஆஸ்திரேலியாவில் நீடித்துவருகின்றது.

இவ்வாறான நிலையில தான் அகதிகள் தங்களுக்கான நிரந்தரத் தீர்வைத் தருமாறு வலியுறுத்தி 24 மணிநேரப் போராட்டத்தை சிட்னி , மெல்பேர்ண், அடலைட் , பேர்த் மற்றும் பிறிஸ்பேன் ஆகிய நகரங்களில் முன்னெடுத்து வருகின்றனர். மெல்பேர்ணில் ஆரம்பித்த இந்தப்போராட்டம் 60 நாள்களை கடந்துள்ள காலப்பகுதியில் மூன்று அகதிகளின் உயிர்கள் பிரிந்துள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தை சேர்ந்த பெரியதம்பி உதய கரன் புத்தளத்தை சேர்ந்த மனோ மற்றும் வவுனியாவை சேர்ந்த சசிகரன் ஆகியோரே அகதிக்கோரிக்கையுடன் நீண்ட கால நிரந்தர வாழ்வுக்காக போராடி மாண்டவர்கள்.

இவ்வாறு உயிரிழந்த சசிகரனின் மனைவி மேனகா, தனது கணவனின் மரணம் குறித்து எதிரொலியிடம் தெரிவித்த விடயங்களை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறோம்.

“ 2012 ஆம் ஆண்டு எனது கடைசி மகன் வயிற்றில் இருக்கும் போது நாட்டை விட்டு வெளியேற வேண்டிய சூழ்நிலைக்கு அவர் தள்ளப்பட்டார். எங்களுக்கு மூன்று பிள்ளைகள். அவர் ஆஸ்திரேலியாவுக்கு சென்ற நாள் முதல் எங்களை எடுக்கவேண்டும், நிம்மதியான நாட்டில் நிம்மதியாக வாழ வேண்டும் என்ற எண்ணத்திலேயே இருந்தார்.

எனது கடைசி மகன் தகப்பனை நேரிலேயே பார்த்தது கிடையாது. எனது கணவரின் உடலை நாங்கள் எங்கட வீட்டுக்கு கொண்டுவரவேண்டும் என்று கோருகின்றோம். ஏனெனில் எங்கள் பிள்ளைகள் அவரின் உடலை தொட்டு தந்தையை உணரவேண்டும் என்பது என் அவா.” என்று கதறிய குரலோடு அவருடைய பிரிவின் வலியை சொல்ல தொடங்கினார் மேனகா.

“ எனது கணவர் தன்னுடைய வாழ்நாளில் எந்த வித சந்தோஷங்களையும் அனுபவித்தது கிடையாது. அவரின் இறுதி நாள்வரை அவர் தனது பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாட வேண்டும் என்பது பேரவா. அது இறுதிவரை நடக்கவே இல்லை. அதை நான் இனி எப்படி நிறைவேற்றுவேன் என்பது எனக்கு தெரியவில்லை. ஆஸ்திரேலியாபோன நாள் முதல் அவர் எப்போதும் வீடியோ கோலில் தான் பேசுவார். பிள்ளைகளின் குறும்புத்தனங்களை எப்போதும் ரசித்துக் கொண்டேயிருப்பார்.” என்று கூறிக்கொண்டிருக்கும் போது தொலைபேசியில் அழுகை மட்டும் வந்துகொண்டிருந்தது.

“அவருடன் இறுதிநாள் கதைக்கும் போது கூட சொன்னார், ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன. விசா வந்து விடும் . உங்களை எடுத்துப்போடுவேன் என்றார். ஆனால் விடியகாலையில் இடிவிழுந்த செய்திதான் கேட்டது” என சொல்லிக்கொண்டிருந்த மேனகா ’எனது கணவரின் உடலை எப்படியாவது எங்களிடம் அனுப்பிவிடுங்கோ’ என்று கண்ணீர்க் கோரிக்கையுடன் தொலைபேசி அழைப்பைத் துண்டித்தார்.

“ தனது குடும்பத்தை நினைத்து எப்போதும் அழுவதும் பேசுவதுமாகதான் இருப்பார். அவரின் இந்நிலையை பார்த்து நான் அவரை மனநல வைத்தியரிடம் கூட்டியும் சென்றுள்ளேன். அவர் மனநல வைத்தியரின் ஆலோசனையை பெற்றும் வரு கிறார். அதுமட்டும் இல்லை அகதிகளின் ஆர்ப்பாட்டத்துக்கு போகவேண்டும், அவர்களுக்கான உணவை வழங்கவேண்டும் என்று அடிக்கடி கூறிவருவார். இந்த நிலையில் தான் அவரின் முடிவு இப்படி நடந்தேறியது” - என்று மெல்பேர்ணில் உள்ள அவரது நண்பரான சத்து தெரிவித்தார்.

சசியின் சாவை முந்திக்கொண்டு சென்ற மனோவின் அம்மாவும் எதிரொலியிடம் பகிர்ந்தவற்றையும் நாம் உங்கள் முன் வைக்கின்றோம்.

“மட்டக்களப்பு தில்லுமலையில் இருந்து இடம்பெயர்ந்து புத்தளத்தில் வசித்து வந்தோம். இந்நிலையிலேயே கணவர் எதிர்கொண்ட அச்சுறுத்தல் காரணமாக ஆஸ்திரேலியாவுக்கு வர வேண்டிய நிலை ஏற்பட்டது. எங்களுக்கு நான்கு பிள்ளைகள். அவர்களுடன் சேர்ந்தே நாங்கள் இங்கு வந்தோம். அப்போது மனோவுக்கு வயது 11. அவருக்கு அறிவு வந்த காலம் முதல் அவர் கேட்கும் ஒரு கேள்வி ஏன் நாங்கள் இங்கு வந்தோம்? ஏன் இப்படி விசா இல்லாமல் இருக்கிறோம் என்பது அவருடைய கேள்வியாகவே எப்போதும் இருக்கும்.

இறக்கும்போது அவருக்கு வயது 23. அவருக்கு ஒன்றரைவயதில் ஒரு குழந்தையும் உள்ளது. வருட இறுதிக்காலத்தில் விசா இருந்தால் எல்லா பிரச்சினைக்கும் தீர்வு கிடைக்கும் என்றே எனக்கு அவன் சொல்வான். விசா கிடைக்கவேண்டும் என்று தான் அவன் போராட்டத்திற்கும் அடிக்கடி செல்வான். அவனுடைய எல்லாப் பிரச்சினையையும் இப்படி இறக்கி வைப்பான் என்ற எனக்குத் தெரியாது - என்று தழுதழுத்த குரலுடன் கூறினார் மனோவின் அம்மா.

இவ்வாறான அகதிகளின் தொடர் மரணங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமாயின், ஏதிலிகளின் திறந்த வெளி சிறையை உடைத்தெறிய அனைத்து தரப்பின் ஒத்துழைப்பையும் வழங்கவேண்டியது வரலாற்றுக்கடமை.

# பரம்பொருளும் தன் வாயால் கெடும்

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதைவிட்டு விட்டு இந்த கைது எல்லாம் தலைமறைவில் நடக்கும் பணப்பரிவர்த்தனைகள் மட்டுமே எனக்கு காரண-மாகத் தெரிகிறது ( பரம்பொருள் அறக்கட்டளை பெயரில் 100 கோடி ரூபா சொத்துக்கள் இருக்கின்றனவாம். கழகக் கண்மணிகள் சும்மா விடுவார்களா ? ) . அமைச்சரின் பேச்சில் முதிர்ச்சியற்ற தன்மை தெரிகிறது. இந்த மாதிரி சம்பவம் கரு-ணாநிதி அல்லது ஜெயலலிதா ஆட்சி காலத்தில் நடந்தால் என்ன செய்திருப்பார்கள்? கலைஞர் அவர்கள் ,பதிலுக்கு எதாவது தம-ிழாசிரியரையோ அல்லது இந்துத்துவ மடாதிபதிகளை வைத்து பரம்பொருள் கூறியதில் பெரும்பிழை இருக்கிறது என்று இந்த விஷயத்தை வேறு விதமாக சமாளித்து முடித்துவிட்டிருப்பர். அம்மா ஆட்சியிலிருந்தால் இப்பொழுது கல்வி அமைச்சரின் பதவி போயிருக்கும்.

சுஜாதா தனது கற்றதும் -பெற்றதும் தொடரில் இவ்வாறு எழுதியிருப்பார் “Andy warhol சொன்ன “In the future everyone will have their fifteen minutes of fame” என்ற அவரது கூற்று தான் நினைவுக்கு வருகிறது.எதிர்க்காலத்தில் எல்லா மனிதர்களும் ஒரு பதினைந்து நிமிடமாவது புகழின் உச்சியில் இருப்பார்கள் என்றார். ஊடகங்களின் வளர்ச்சியை நினைவில் கொண்டு அவர் சொன்ன அந்தக் கூற்று இப்போது ஒரு வகையில் உண்மையாகிக்கொண்டிருகிறது. இப்பொழு துள்ள சமூக ஊடகங்களின் பாதிப்பால் எல்லோரும் ஒரு 15 நிமிட அளவிற்கே புகழ் பெறுகின்றார்கள் . இப்போதுள்ள ஊடக செய்தி வறட்சிக்கு பரம்பொருள் ஒரு தீனி மட்டுமே. நாளை வேறு ஒரு வைரல் விஷயம் கிடைத்தவுடன் மக்கள் அதற்கு போய்விடுவார்கள். ஆகையால் பரம்பொருளை தள்ளிவைத்துவிட்டு அடுத்த வைரல் விடயங்களை எதிர்நோக்கி கடவுமாறு எல்லாம் வல்ல பரம்பொருளை வேண்டிக் கொள்கிறேன்

# Sai Shree Foods Pty. Ltd.

## AUSTRALIA - CANADA - INDIA

# REMARKABLE QUALITY AND RELISHING TASTE.




If you're after the authentic taste of Indian style foods look no further, Sai Shree Foods is the manufacturer of quality Indian Yoghurt, Idli & Dosa mix, Paneer, Shrikhand Kesar Elaichi, Mango Lassi, Punjabi Lassi and much much more. Sai Shree Foods produce a Quality Australian Products in Melbourne facility.

We are also distributing Grand snacks/pickles and Mambalam Iyers pickles (Famous South Indian brand)

**HEAD OFFICE:** Sai Shree Foods Pty. Ltd.
Ph: 03 9706 6211
Unit 17/69-77, Mark Anthony Drive, Dandenong - VIC 3175

**DISTRIBUTORS:** Sai Shree International Pty Ltd
Sydney & Canberra - Mr Bhaskar - 0421 835 554
Products Available - Adelaide, Perth, Brisbane & Darwin



# மாற்றம் ஒன்றே மாறாதது

● சியாமிளா யோகேஸ்வரன்

மனித குலமானது ஆண், பெண் என்ற இரு பாலினராக அடையாளம் காணப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட காலம் இப்போது மாறி வருகின்றது. பிறப்பால் ஆண் எனவும், பெண் எனவும் முத்திரை குத்தப்பட்டு, அதற்கேற்ற குணாதிசயங்களுடன் ஒத்தவர்களாகவே மனிதர்கள் நோக்கப்பட்டனர். இயற்கையாக ஒரு மனிதனில் ஏற்படும் பாலின வேறுபாடுகளை மதமோ அல்லது சமூகமோ இலகுவாக ஏற்றுக் கொண்டு விடவில்லை. சமூகத்தினரால் சொல்லாலும் செயலாலும் வருத்தப்படுவதால், உண்மையை உள்ளுக்குள் வைத்துக் குமையும் ஒரு அவல நிலை உலகெங்கும் காணப்படுகின்றது அதிலும் பாலின வேறுபாடுகள் பற்றிய அறிவோ அல்லது புரிதலோ இல்லாத கீழைத்தேய நாடுகளில் அவர்கள் சமூகத்துக்கு முரணானவர்கள் எனக் கருதப்பட்டு ஒதுக்கி வைக்கப்பட்டார்கள். அவுஸ்ரேலியா போன்ற அபிவிருத்தி அடைந்த நாடுகளில், அவ்வாறான ஒரு பாரபட்ச நிலைமை இருக்காது என்ற எதிர்பார்ப்புக்குப் புறம்பாகவே நடப்பு நிகழ்வுகள் இருக்கின்றன.

LGBTQ என்று சுருக்கமாகக் கூறப்படுவதற்குள் ஆண் -பெண் என்ற திட்டவட்டமான இருபால் தவிர்ந்த லெஸ்பியன் (ஓரினப்பாலுணர்வுள்ள பெண்கள்) Gay (ஓரினப்பாலுணர்வுள்ள ஆண்கள்) Bisexual (இருபாலின ஈர்ப்பு) Transgender (மாற்றுப்பாலினம்) போன்ற மேலும் பல பாலின வேறுபாடுகள் அடக்கப்பட்டுள்ளன. ஹோர் மோன்கள், மரபு ரீதியான காரணங்கள், ஒரு மனிதனின் சுய விருப்பம் அல்லது தெரிவு போன்றன இவ்வாறான பால் வேறுபாடுகளுக்குக் காரணமாக அமைகின்றன. காலத்தோடு ஏற்படும் மாற்றங்களாக இவற்றையும் ஏற்றுக் கொண்டாக வேண்டிய கட்டாயம் இருந்தாலும் அது அத்தனை சுலப மானதாகக் காணப்படவில்லை.

ஆஸ்திரேலியாவில் 2026 ஆம் ஆண்டுக்கான சனத்தொகைக் கணக்கெடுப்பில் இந்தப் பாலின வேறுபாடு கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது என்ற அரசாங்கத்தின் அறிவித்தலால் தற்போதைய பேசுபொருளாக இவ்விடயம் மாறியிருக்கின்றது. சனத்தொகைக் கணக்கீட்டின் போது சேகரிக்கப்படும் புள்ளிவிபரமானது, அரசாங்கத்தின் கொள்கைத் திட்டங்களை வகுக்க உதவுவதுடன் நிதி ஒதுக்கீடு சம்பந்தமான முக்கிய முடிவுகளையும் எடுக்க உதவுகின்றது என்பது இந்த விவகாரத்தின் பின்னணியில் இருக்கும் உண்மை.

2023 ஆம் ஆண்டுக்கான லேபர் கட்சிப் பிரமாணத்தின் படி 2026 ஆம் ஆண்டுக்கான கேள்விக் கொத்தில் மாற்றுப் பாலினங்களை வேறுபடுத்தி அறிவதற்கான கேள்வி உள்ளடக் கப்படும் என்ற உத்தரவாதம் கொடுக்கப்பட்டிருந்தது. அதை சனத்தொகை கணக்கெடுப்பு வாரியத்தின் கேள்விக் கொத்துக்கான மீளாய்வு அறிக்கையும் உறுதிப்படுத்தியிருந்தது. ஆயினும் மாற்றுப் பாலினத்தினரை அறிவதற்கான எந்த விதமான கேள்விகளும் உள்ளடக்கப்பட மாட்டாது என்ற அரசாங்கத்தின் அண்மைய அறிவிப்பைத் தொடர்ந்து பெரும் அதிருப்தி அலை ஒன்று கிளம்பியுள்ளது. அதன் தொடர்ச்சியாக 2026 ஆம் ஆண்டுக்கான கணக்கெடுப்பில் இது சம்பந்தமான ஆலோசனைகளை வழங்குவதற்காக நியமிக்கப்பட்டிருந்த சிரேஷ்ட உறுப்பினரான டேவிட் குறூனன் தனது பதவியை ராஜினாமா செய்திருக்கின்றார்.

இது சம்பந்தமாகக் கருத்துரைத்த அவுஸ்ரேலிய பிரதம மந்திரி அவ்வாறான ஒரு கேள்வியை உள்ளடக்குவதன் மூலம் மக்களிடையே பாகுபாட்டைக் கொண்டு வந்து, பாலின வேறுபாடு உடையவர்களை சமூகத்தில் வேறுபடுத்திப் பார்ப்பதை விரும்பாததால் தான் மேற்கண்ட முடிவு எடுக் கப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளார்.

பழங்குடியினரின் கலாசார வேறுபாடுகள், அவர்களின் மூதாதையினர் சம்பந்தமாக அறிவதற்குக் கணக்கெடுப்பில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளதாக கூடவே ஒரு சமாதான அறிக்கை வெளியிடப்பட்ட போதும் , மாறி வரும் பாலின வேறுபாட்டுக்கு ஏன் முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை என்பதும் இதன் பின்னணியில் வேறு விதமான அழுத்தங்கள் இருக்கின்றனவா என்பதும் கேள்விகளாக எழுந்துள்ளன.

மாற்றுப் பாலினத்தினர் தொடர்பான கேள்விகள் உள்ளடக் கப்பட்டு அவர்கள் தொடர்பான தகவல்கள் ஏன் திரட்டப்பட வேண்டும்? இன்றைய இளம் சந்ததியினர் பலரிடையே மாற்றுப் பாலினம் என்பது பெரும் உளவியல் பிரச்சனையாக உருவாகி வருகின்றது. தம் உடல் பற்றியோ அல்லது உளம் பற்றியோ வெளியில் சொல்லத் தயங்குவதால் அவர்கள் மனரீதியான பாதிப்புள்ளாகி, தற்கொலை, சட்டத்துக்குப் புறம்பான போதை மருந்துப் பாவிப்பு, மனஅழுத்தம், வீட்டில் தங்கியிருக்க முடியாமல் வெளியேறுதல் போன்ற பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கின்றார்கள். அதுமட்டுமல்லாமல் சமூகத்துக்கு அஞ்சி உடல் ரீதியாக எதிர் நோக்கும் பிரச்சனைகளுக்கு மருத்துவ ஆலோசனை பெற முடியாமலும் தவிக்கின்றார்கள். தம்முடன் தாமே போராடிக் கொண்டிருப்ப வர்களிற் பலர் பாலியற் தொல்லைகளுக்கு உள்ளாவதை வெளியில் சொல்ல முடியாமல் தவிக்கும் சம்பவங்களையும் மறுப்பதற்கில்லை.

கணக்கெடுப்புப் புள்ளி விபரமானது மாறுபட்ட பாலினத் தினரில் இத்தனை சதவீதமானோர் இருக்கின்றார்கள் என்று வெளிப்படையாக அறிவிக்கும் போது, அதனால் நிறைய நன்மைகள் ஏற்பட வாய்ப்பிருக்கின்றது. வெளியில் சொல்ல முடியாமல் தவிப்பவர்கள், தாம் மட்டும் தனித்தவர்கள் அல்ல, தம்மைப் போல் இன்னும் பலர் இந்த சமூகத்தில் இருக்கின்றார்கள் என்று உணரும் போது கிடைக்கக் கூடிய மனஆறுதல் மிக முக்கியமானது. எம்மைச் சுற்றிலும் அவ்வாறான பலர் வாழ்கின்றார்கள் என்று தெரிய வரும் போது, சமூகமும் அந்த உண்மையை இலகுவாக ஏற்றுக் கொள்ளக் கூடும். அதனால் அவ்வாறானோரை தவறாக நோக்கும் சமூகத்தின் கண்ணோட்டம் மாறுவதற்கான வாய்ப்பும் உருவாகும்.

அது மட்டுமல்லாமல் பாலின வேறுபாடு கொண்டவர்கள், வெளியுலகைப் பற்றிய அச்சமின்றித் தமக்கான வைத்திய உதவி யையோ அல்லது கல்வியையோ எந்தத் தயக்கமுமின்றிப் பெற்றுக் கொள்ளலாம். சுருக்கமாகச் சொல்வதென்றால் ஆண், பெண் கழிப்பறை என்று மட்டுப்படுத்தி இருக்கும் இடங்களில் எல்லாம் பாலின வேறுபாடுள்ளவர்கள் ஒதுக்கப்படுகின்றார்கள். எந்தக் கழிப்பறையைப் பாவிப்பது என்று தெரியாமல் குழம்புகின்றார்கள். மனிதர்களில் வேறுபாடு காட்டாமல் எல்லோரும் ஒரே விதமாகத் தான் நடத்தப்படு கின்றார்கள் என்ற அடிப்படை மனித உரிமைக்கூற்று இங்கே பிழைத்து விடுகின்றது அல்லவா? உடலில் ஏற்படும் மாற்றங்க ளுடனும் உள்ளத்தில் ஏற்படும் குழப்பங்களுடனும் போராடுப வர்களை சமூகமும் வேறுபடுத்திப் பார்ப்பது நியாயமாக இருக்க மாட்டாது என்ற உண்மையை சகமனிதர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

மெல்பேர்ன் மாநில முதல்வருடன், மனித உரிமை செயற்பாட்டாளர்களும் கொடுத்து வரும் அழுத்தத்தினால், பாலின வேறுபாட்டாளர்களை அடையாளம் காணும் ஓரிரு கேள்விகள் 2026ல் உள்ளடக்கப்படலாம் எனுமளவுக்கு அரசாங்கம் இறங்கி வந்துள்ளமை வரவேற்கத்தக்கது. மதத்தை அடிப்படையாகக் கொண்ட பாடசாலைகளில் சில இவ்வாறான பல்லினப்பாலியற் கருத்தைக் இன்னமும் ஆதரிக்கத் தயாராக இல்லை. மாற்றம் ஒன்றே மாறாதது எனினும் அவை அத்தனை எளிதில் ஏற்றுக் கொள்ளப்பட்டு விடுவதில்லை.

இவ்வாறான சமூக அங்கீகரிப்புகளை மனிதன் தனக்குச் சாதகமாக்கி தன் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு கொள்ளலாம். ஆனால் ஆண், பெண் என்ற இயற்கையின் படைப்புக்கு முற்று முழுதாக எதிரியாகி, மனதளவில் தன்னைத் தானே குழப்பிக் கொள்ளவும் வாய்ப்பிருக்கின்றது. குழப்பமான மனத்தெரிவுகள் அதிகமாகி மனித இனத்தின் இருப்பு கேள்விக்குறியாக மாறாமல் இருக்க வேண்டுமாயின், அதற்கான தெளிவும், கல்வியறிவும் இளம்சமுதாயத்துக்கு வழங்கப்பட வேண்டும்.

# இலங்கை: ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு வெற்றி?

இலங்கையில் நடைபெறவுள்ள 09 ஆவது ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு வெற்றி வாய்ப்பு அதிகமுண்டு?” என்ற கேள்விக்கு இன்னும் சரியான பதில் இல்லை. யாராலும் ஊகிக்கவே - மதிப்பிடவே - முடியாத அளவுக்கு இந்தத் தடவை தேர்தல்களம் மாறுபட்டுள்ளது. அதனால் வழமையை விடத் தேர்தற் களம் விறுவிறுப்படைந்திருக்கிறது. மட்டுமல்ல வித்தியாசமானதாகவும் உள்ளது.

இந்தத் தேர்தற்களத்தில், 39 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள். ஆனாலும் சஜித் பிரேமதாச, அநுரகுமார திசநாயக்க, ரணில் விக்கிரமசிங்க ஆகிய மூன்று பிரதான வேட்பாளர்களுக்கிடையில்தான் வெற்றியைப் பெறுவதற்கான போட்டி உண்டு. இந்த மூவரில் ஒருவரே அதிகாரத்தைக் கைப்பற்றப்போகிறார்கள். ஆனால், அது எளிதானதல்ல.

இதற்கு வெளியே இன்னும் இரண்டு வேட்பாளர்கள் உள்ளனர். ஒருவர் நாமல் ராஜபக்ஸ. இவர் ராஜபக்ஸ குடும்பத்தின் வாரிசு. சிங்கள மக்களின் வாக்குகளைப் பிரிக்கக் கூடிய செல்வாக்குள்ள வேட்பாளர். இவருடைய இறுதி நேர முடிவுகள் எப்படி அமையும் என்று தெரியவில்லை. இப்போதுள்ள நிலையில் நாமல் ராஜபக்ஸவின் வாக்குகள் பிரிந்தால், வெற்றிக்கான வாக்குகளைப் பெறுவது மேலும் கடினமாக இருக்கும்.

இந்தக் கடின நிலையை உருவாக்கக் கூடிய இன்னொரு வேட்பாளர் அரியநேத்திரன். இவர் தமிழ்த் தரப்பினால் “தமிழ்ப்பொது வேட்பாளர்” என்ற அடையாளத்தோடு நிறுத்தப்பட்டிருக்கிறார். என்பதால் தமிழ் மக்களின் வாக்குகளை இவர் பிரித்தால், வெற்றிக்கான வாக்குகள் மேலும் சிதைவடையும். அப்படி நிகழும்போது வெற்றிக்கான வாக்குகளைப் பெறுவது இன்னும் நெருக்கடியை உண்டாக்கும்.

வழமையாக இரண்டு வேட்பாளர்களுக்கிடையிலான போட்டியே உச்சமாக இருப்பதுண்டு. அதனால், யாராவது ஒருவர் 50 விழுக்காட்டுக்கு மேலாதிகமான வாக்கைப் பெற்று விடுவார். வெற்றி (இலக்கு) இலகுவாகி விடும். இதற்காக அவர்கள் சிறுபான்மைத் தேசிய இன மக்களின் (தமிழ் பேசும் மக்களின்) வாக்குகளை ஓரளவுக்கு இலக்கு வைத்துச் செயற்படுவதுண்டு. ஆனாலும் சில சந்தர்ப்பங்களில் அது குழப்பத்துக்குள்ளாகியுள்ளது.

2005 இல் வாக்களிப்பைத் தவிர்க்குமாறு விடுதலைப்புலிகள், மக்களைக் கோரியிருந்தனர். அதனால் தமிழ் மக்களின் வாக்குகளில்லாமல் மகிந்த ராஜபக்ஸ வெற்றியடைந்தார். அப்படியொரு நிலை 2020 இலும் நடந்தது. ஆகவே கோட்டபாய ராஜபக்ஸ தமிழ், முஸ்லிம், மலையக மக்களின் வாக்குகளின்றித் தனிச் சிங்கள வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டினார். என்பதால் ராஜபக்ஸக்கள் வெளிப்படையாகவே Pro - Sinhalese ஆகச் செயற்பட்டனர். அவர்கள் பின்னாளில் உருவாக்கிய பொதுஜன பெரமுன என்ற தாமரைமொட்டுக்கட்சி கூட தனிச் சிங்களக் கட்சியே.

இதனால் தமிழ் பேசும் சமூகத்தினரின் வாக்குகளின்றித் தனியே சிங்கள மக்களின் வாக்குகளால் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியடைய முடியும் என்ற நம்பிக்கை சிங்களத் தரப்பில் உருவானது.

இப்போது அதிகாரத்திலிருக்கும் ரணில் விக்கிரமசிங்க கூட கோட்டபாய ராஜபக்ஸ பெற்ற சிங்கள வாக்குகளின் அடிப்படையில் அதிகாரத்தில் இருப்பவரே!

ஆனால், ஒரு விலகலாக 2015 இல் தமிழ், முஸ்லிம், மலையக மக்களின் பேராதரவோடு ராஜபக்ஸக்களைத் தோற்கடித்து மைத்திரிபால சிறிசேன வெற்றியீட்டினார். அதைத் தொடர்ந்து வந்த பாராளுமன்றத் தேர்தலிலும் தமிழ், முஸ்லிம், மலையக, சிங்களத் தரப்புகள் இணைந்த ஆட்சியே அமைந்தது. இதனால் அது நல்லாட்சி” என்று சொல்லப்பட்டது.

ஒப்பீட்டளவில் கடந்த 50 ஆண்டுகால இலங்கை அரசியலில் இப்படியொரு மென்னிலை ஆட்சி நடந்தது 20015 - 2020 காலப்பகுதியில்தான். அந்தக் காலப்பகுதியிற்தான் தமிழ் பேசும் சமூகங்கள் ஓரளவுக்கு நெருக்கடியற்ற அல்லது குறைந்த நெருக்கடியோடான சூழலில் வாழ முடிந்தது. அல்லது ஏற்கனவே இருந்த நெருக்கடிகள் குறைந்தன. ஆனாலும் அது எந்தப் பிரதான பிரச்சினைகளுக்கும் நிரந்தரத் தீர்வைக் காணவில்லை. கொரோனா முடக்கம், ஈஸ்டர் குண்டு வெடிப்பு என்பன அந்தக் காலத்தின் பேரிடர்களாகும்.



இதற்கு அடுத்து வந்த பொருளாதார நெருக்கடி இலங்கையின் அரசியல் நிலவரத்தை முற்றாக மாற்றியமைத்தது. இனவாதத்தை இனியும் அதன் கூரான முனைகளோடு தொடர முடியாது. இனப்பிரச்சினையை வைத்து அரசியல் செய்ய முடியாது என்ற யதார்த்தம் உருவாகியது. அதன் விளைவே இப்போதைய சூழலாகும்.

இதனால் இன்றைய பிரதான வேட்பாளர்களான சஜித், ரணில், அநுர ஆகிய மூவரும் வெளிப்படையாக இனவாதத்தைப் பேசமுடியாதவர்களாக உள்ளனர். கூடவே ஒப்புக்கேனும் தமிழ்பேசும் மக்களுக்கான அரசியல் அதிகாரத்தைப் பகிர்வதைப்பற்றிப் பேசவேண்டியுள்ளது. இதில் யார் அதிகளவில் அதிகாரப் பகிர்வுக்கு இணங்குகிறார்கள். யார் முன்னோக்கிக் கால் வைக்கிறார்கள் என்று பார்க்கக் கூடிய நிலை உருவாகியுள்ளது.

மட்டுமல்ல, தேர்தற் பரப்புரைக் களத்தை வடக்குக் கிழக்குக்கும் விரிவாக்கியிருக்கிறார்கள். பிரதான வேட்பாளர்கள் மூவரும் வடக்குக் கிழக்கில் அடிக்கடி காணப்படுகிறார்கள். அத்துடன், தமிழ்பேசும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் ஆதரவைப் பெறுவதற்கு ஒரு கட்டம் வரையில் கடுமையான முயற்சிகளையும் மேற்கொண்டனர். இதில் ஓரளவுக்கு வெற்றியடைந்திருக்கிறார் சஜித் பிரேமதாச. முஸ்லிம், மலையகக் கட்சிகளோடு தமிழரசுக் கட்சி, சமத்துவக் கட்சி ஆகியவற்றின் ஆதரவைச் சஜித் பெற்றுள்ளார். அரச ஆதரவிலிருக்கும் ஈ.பி.டீ.பி, தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள், இ.தொ.க போன்றவை ரணிலை ஆதரிக்கின்றன.

இந்தச் சிக்கலான பின்னணியில் வெற்றியைப் பெறுவது எப்படி? அந்த வெற்றிக்கனியை யார் பறிக்கப்போகிறார்கள்? என்பதே இன்றைய பெரிய கேள்வி.

தேர்தல்களில் பொதுவாகச் சில அடிப்படைகள் இருப்பதுண்டு. முக்கியமாக நிலையான வாக்குகளை ஒவ்வொரு கட்சியும் அல்லது ஒவ்வொரு வேட்பாளரும் கொண்டிருப்பதுண்டு. அந்த வாக்குகளோடு மிதக்கும் வாக்குகள் சேர்ந்து வெற்றியை உருவாக்கும். அந்த மிதிக்கும் வாக்குகளைத் தீர்மானிப்பது, தேர்தற்களச் சூழலாகும். குறிப்பாக எந்தப் பக்கம் வெற்றியடைய வேண்டும் அல்லது எந்த வேட்பாளர் வெற்றியீட்ட வேண்டும் என்று மக்களின் விருப்பம் உள்ளதோ, அந்தப்பக்கத்தை அல்லது அந்த வேட்பாளரை நோக்கி மிதக்கும் வாக்குகள் குவியும். இன்னொன்று, எந்தப் பக்கத்துக்கு அல்லது எந்த வேட்பாளருக்கு வெற்றிக்கான வாய்ப்பு அதிகமாக உள்ளது எனப் பார்த்து (ஊகித்து) அளிக்கப்படும் மிதக்கும் வாக்குகள் வெற்றியைத் தீர்மானிக்கும்.

இப்பொழுது பிரதான வேட்பாளர்கள் ஒவ்வொருவரும் தமக்கெனக் கொண்டுள்ள வாக்கு வங்கிகளுக்கு அப்பால், கவர்ந்திழுக்கும் வாக்குகளை எந்த அடிப்படையில் பெறப் போகின்றனர் என்பதே ஆழ்ந்து கவனிக்க வேண்டியது. கடந்த காலத்தை விட இந்தத் தடவை ஜே.வி.பி (தேசிய மக்கள் சக்தி) சற்று அதிகமான வாக்குகளை எடுக்கும் என நம்பப்படுகிறது. நிலவரமும் அதைக் காட்டுகின்றன.

முன்னரை விட இந்தத் தடவை ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சற்று அதிகமான வாக்குகள் கிடைக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவர்களுக்கு நிகரான வாக்குகளை சஜித் பிரேமதாசவும் பெறுவார் என்று கூறப்படுகிறது.

ஆக, இப்போதுள்ள அவதானித்தின்படி மூன்று வேட்பாளர்களுக்கும் ஏறக்குறையச் சமனிலையிலான வாக்குகளே சிங்களத் தரப்பிலிருந்து கிடைக்கக் கூடியதாக உள்ளது. தமிழ்பேசும் சமூகத்தினரின் வாக்குகளிலும் மூவரும் கணிசமான வாக்குகளை (சமனிலையான அல்ல) பெறக்கூடிய நிலை உண்டு. ஆனால், மலையக, முஸ்லிம் கட்சிகளோடு தமிழரசுக் கட்சி, சமத்துவக் கட்சி உள்ளிட்டவற்றின் ஆதரவு சஜித் பிரேமதாசவுக்கு மேலதிகமாகக் கிடைத்திருப்பதால், வெற்றியை நோக்கிச் செல்வதற்கு அவருக்கு அனுகூலங்கள் அதிகமுண்டு எனக் கருதலாம்.

இன்னொரு காரணமும் சஜித்தின் பக்கத்தில் உண்டு. ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் வரப்போகின்ற பாராளுமன்றத் தேர்தலில் அநுரவோ, ரணிலோ ஆட்சியமைக்கக்கூடிய பலத்தைப் பெறக்கூடிய நிலையில் இல்லை. அவர்கள் தரப்பில் அப்படியானதொரு கட்டமைப்புச் சூழல் இன்னும் உருவாகவில்லை. மறுபக்கமாக அதைக் கொண்டிருப்பது சஜித் பிரேமதாசவே என்பதால், அதிபர் தேர்தலில் அவரை ஆதரிப்பதே பொருத்தமானது என்று மக்கள் சிந்திக்கக் கூடும் என்பது.

(11ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை: ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு வெற்றி?

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால், தேர்தல் முடிவுகள் சில சமயங்களில் விசித்திரமாக அமைந்து விடுவதுண்டு. அது மக்களின் மனநிலை, சூழல் போன்றவற்றினால் அமைவது.

இப்பொழுது மக்களுடைய எண்ணமெல்லாம், வேட்பாளர்களை (போட்டியாளர்களை) வெற்றியடைய வைப்பதல்ல. அவரவர் கட்சித் தொண்டர்களையும் அபிமானிகளையும் தவிர, பெரும்பாலான மக்களுடைய எண்ணமெல்லாம் தாம் வெற்றியடைய வேண்டும் என்பதாகவே உள்ளது. தாம் வெற்றியடைய வேண்டும் என்றால் தங்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடியவர் யார்? தங்களுடைய தேவைகளை நிறைவேற்றக் கூடியவர் யார்? தங்களுடைய கோரிக்கைகளைச் செவி கொள்ளக் கூடியவர் எவர்? என்றே அவர்கள் சிந்திக்கின்றனர். இதுவே வெற்றியாளர்களைத் தீர்மானிக்கக் கூடியது.

இந்தத் தேடலுக்கு இலகுவில் விடை கிடைக்கப்போவதில்லை. ஏனென்றால், தமிழ் மக்களைப் பொறுத்தவரையில், அவர்கள் தமக்கான தீர்வைத் தரப்போவது யார்? கால நீடிப்புச் செய்யாமல், பாரபட்சமற்ற விதத்தில் அபிவிருத்தியைச் செய்யக் கூடியவர் எவர் என்றே தேடுவர். அதற்குரியவர் யார் என்று கண்டறியக் கடினமான நிலையிற்தான், தமிழ்த்தரப்பிலுள்ள ஓரணியினர் தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்தியிருக்கிறார்கள். ஏனையோர்தான் தமக்குரியது யார் எனத் தீர்மானிப்பர்.

சிங்கள மக்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு ஊழலற்ற, வினைத்திறன் மிக்க, நம்பிக்கைக்குரிய, மக்களுடன் நெருங்கி நிற்கக் கூடிய தரப்பை - வேட்பாளரையே அவர்கள் தெரிவு செய்வர். அவர்களுடைய கஸ்டங்களைத் தீர்க்கக் கூடியவரும் கஸ்டங்களுக்கு அடிப்படையான காரணங்களையும் காரணகாரர்களையும் நீக்கக் கூடியவருமே வேணும்.

இப்படியான ஒரு ஆளுமை -வெற்றிக்கான ஆள் - களத்தில் இல்லை.

அதாவது அப்படியென்றால், அந்த வேட்பாளர் ஒரு மாயாவியாக, சாகஸக்காரராக இருக்க வேண்டும். அல்லது எந்த நிலையிலும் சரியானதை, மக்களுக்கானதைச் செய்து முடிப்பேன் என்று துணிச்சல் மிக்க முடிவுகளை எடுத்துச் செயற்படுத்தக் கூடியவராக இருக்க வேண்டும்.

போட்டியாளர்களில் ஒருவரான ரணிலின் ஆற்றல் குறித்து எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். ஐந்து தடவைகள் பிரதமராகவும் தற்போது ஜனாதிபதியாகவும் இருந்த காலப்பகுதியில் அவர் செயற்பட்ட விதம், எதிர்காலத்தில் மேலும் எப்படிச் செயற்படுவார் என்பதைச் சொல்லும். ஆகவே ரணிலை விட்டால் ஏனைய இருவர், அநுரவும் சஜித்துமே.

இருவரும் மக்களுடன்தான் நிற்கிறார்கள். ஆனால், தங்களுடன் யார் நிற்கிறார் என்பதை மக்களே தீர்மானிக்க வேண்டும். அதுவே வெற்றியாகும்.

அப்படியென்றால் தமிழ்ப்பொது வேட்பாளரின் நிலை என்ன? பெறுமதி என்ன என்ற கேள்விக்கு என்ன பதில்? என்று நீங்கள் கேட்கலாம்.

காலம்தான் அதற்கான பதிலைச் சொல்லும்.



# தமிழ்ப் பொதுவேட்பாளர் தேர்தலில் வெல்வதற்கல்ல உரிமையைச் சொல்வதற்கே!

இலங்கையில் எதிர்வரும் செப்ரெம்பர் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில், தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பின் ஏற்பாட்டில் தமிழ்ப் பொது வேட்பாளராக மட்டக்களப்பு மாவட்டத்தின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் களமிறக்கப்பட்டுள்ளார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களில் ஒருவரான பா.அரியநேத்திரன் இவ்வாறு பொது வேட்பாளராக போட்டியிட்டாலும் தமிழரசுக் கட்சியின் சுமந்திரன் அணி அதற்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியுள்ளது. எனினும், நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிறிதரன் தரப்பு தமிழ்ப் பொதுவேட்பாளருக்காக களத்தில் குதித்துள்ளது.

வடக்கு, கிழக்கில் செயற்படும் மற்றுமொரு தமிழ்த் தேசியக் கட்சியான, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் தமிழ் பொதுவேட்பாளர் முயற்சியை கடுமையாக சாடியுள்ளது. தமிழ் மக்கள் ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிக்க வேண்டும் எனவும் அழைப்பு விடுத்துள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் தமிழ்ப் பொது வேட்பாளர் பா. அரியநேத்திரன் 'எதிரொலி'க்கு வழங்கிய நேர்காணல் இங்கு பிரசுரிக்கப்படுகின்றது.

**நேர்கண்டவர்: ஆர்.சனத்**



## தமிழ்ப் பொதுவேட்பாளர் பா. அரியநேத்திரன்

**கேள்வி : 1982 முதல் 2019 ஆம் ஆண்டுவரை இலங்கையில் நடைபெற்றுள்ள ஜனாதிபதித் தேர்தல்களில் தமிழ் வேட்பாளர் ஒருவர் வெற்றிபெற்றதில்லை. அவ்வாறு வெற்றிபெறுவதற்குரிய சாத்தியம் அரிது என்றபோதிலும் தமிழ்ப் பொதுவேட்பாளர் ஒருவர் களமிறக்கப்பட்டதன் நோக்கம் என்ன?**

**பதில் :** இலங்கையில் 8 ஜனாதிபதித் தேர்தல்கள் நடைபெற்றுள்ளன. எட்டுப் பேர் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிகளாக பதவி வகித்துள்ளனர். அவர்கள் அனைவருமே தமிழ் மக்களைத் தொடர்ச்சியாக ஏமாற்றிவந்துள்ளனர்.

இணைந்த வடக்கு-கிழக்கில் சமஷ்டி அடிப்படையிலான தீர்வுக்காகவே நாம் போராடிவருகின்றோம். இது தொடர்பில் அவ்வப்போது பேச்சுகள் நடத்தப்பட்டாலும் இறுதியில் ஏமாற்றமே எஞ்சும் நிலையே நீடிக்கின்றது.

எனவே, தீர்வு விடயத்தில் இனியும் ஏமாறத் தயாரில்லை என்ற செய்தியை வாக்களிப்புமூலமாக ஆட்சியாளர்களுக்கு எடுத்துரைப்பதற்காகவே ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளராக நான் போட்டியிடுகின்றேன். ஜனாதிபதிப் பதவிக்கு தெரிவாக வேண்டும் என்பது அல்ல, எமது கோரிக்கையை தெளிவாக எடுத்துக்கூற வேண்டும் என்பதே எமது பிரதான நோக்கமாகும்.

**கேள்வி : ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தென்னிலங்கையில் உள்ள பிரதான வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் வெளிவந்துள்ளன. இவை தொடர்பில் திருப்தி இருக்கின்றதா?**

**பதில் :** திருப்தியடையக்கூடிய வகையில் அவற்றில் ஒன்றுமில்லை. சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வையே நாம் கோருகின்றோம். அதைப்பற்றி தென்னிலங்கை ஜனாதிபதி வேட்பாளர்கள் எவரும் குறிப்பிடவில்லை. மாறாக அரசமைப்பில் 13 ஆவது திருத்தச்சட்டம் பற்றியே குறிப்பிட்டுள்ளனர்.

'13' நடைமுறைப்படுத்தப்படும் என அநுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார். பொலிஸ் அதிகாரம் தவிர ஏனையவை அமுல்படுத்தப்படும் என ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.சஜித் பிரேமதாசவும்' 13' பற்றியே கதைத்து வருகின்றார்.

1987 இல் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரமே 13 ஆவது திருத்தச்சட்டம் நடைமுறைக்கு வந்தது. தற்போது 37 வருடங்கள் கடந்துவிட்டன. இக்காலப்பகுதியில்கூட 13 ஆவது திருத்தச்சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்படவில்லை. அதாவது 37 வருடங்களாக அதிகாரப்பகிர்வு விடயத்தில் தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டுவந்துள்ளனர்.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே இம்முறையும் '13' பற்றி கதைக்கின்றனர்.இது தேர்தல்கால வாக்குறுதியாகக்கூட இருக்கலாம். மாறாக தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டும் என்ற இதய சுத்தியுடன் தென்னிலங்கை ஜனாதிபதி வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்களில் தீர்வுகள் முன்மொழியப்படவில்லை.

**கேள்வி : தமிழ்ப் பொதுவேட்பாளர் தொடர்பில் தமிழ் அரசியல் கட்சிகளுக்கிடையில்கூட மாறுபட்ட கருத்துகள் உள்ளன. சிலர் இம்முயற்சியை எதிர்க்கின்றனர். ஒரு தமிழ்த் தேசிய அரசியல்வாதி மற்றும் ஊடகவியலாளர் என்ற அடிப்படையில் இந்தக்கேள்விக்கு உங்கள் பதில் என்ன?**

**பதில் :** தமிழ்ப் பொதுவேட்பாளர் முயற்சியென்பது கட்டாயத் தேவையாகும். 2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போதே நாம் இதனைச் செய்திருக்க வேண்டும். இம்முறையேனும் இது சாத்தியமானது வரவேற்கப்படக்கூடிய விடயமாகும். அந்தவகையில் இதற்குரிய முயற்சிகளை முன்னெடுத்த தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பினருக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். தமிழ் மக்களும் இது பற்றி சாதகமான கண்ணோட்டத்தில் பார்க்கும் நிலைமை உருவாகியுள்ளது.

**கேள்வி : தமிழ்ப் பொதுவேட்பாளர் களமிறக்கப்பட்டத பின்னணியில் இந்தியா இருக்கின்றது என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது. இது தொடர்பில் உங்கள் கருத்து என்ன?**

**பதில் :** இந்தியாவோ, சீனாவோ அல்லது அமெரிக்காவோ இதன் பின்னணியில் இல்லை. தமிப்ழ் பொதுவேட்பாளர் களமிறக்கப்பட்டது கூட மேற்படி நாடுகளுக்கு ஒரு கசப்பான விடயமாக இருக்கலாம். எனவே, தமிழ்ப் பொதுவேட்பாளர் விடயத்தின் பின்னணியில் எந்தவொரு வெளிநாடும் இல்லை. தமிழ் மக்களுக்கான ஒன்றிணைந்த முயற்சி மாத்திரமே.

**கேள்வி : தமிழ்ப் பொதுவேட்பாளர் தரப்பினர் ஜனாதிபதி ரணிலின் எடுபிடிகள் என்ற சந்தேகம் உள்ளது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் குற்றஞ்சாட்டியுள்ளார். தமிழ்ப் பொதுவேட்பாளர் முயற்சிக்கு முஸ்லிம் சமூகத்தில் எத்தகையை வரவேற்பு உள்ளது?**

**பதில் :** வடக்கு, கிழக்கில் வாழும் முஸ்லிம் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய அரசியல் கட்சிகள் தென்னிலங்கையில் உள்ள ஜனாதிபதி வேட்பாளர்களை ஆதரிக்கின்றன. எனினும், முஸ்லிம் மக்கள் மத்தியில் எமக்கு வரவேற்பு உள்ளது. இலங்கை அரசால் தமிழர்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர் எனவும், தமிழ் மக்களின் கோரிக்கைகள் நியாயமானவை எனவும் முஸ்லிம் புத்திஜீவிகள் வலியுறுத்தி வருகின்றனர். எனவே, முஸ்லிம் மக்கள் வாக்களிப்பார்கள் என்ற நம்பிக்கை உள்ளது.

வடக்கு, கிழக்கில் வாழக்கூடிய தமிழ் பேசும் மக்கள் சுதந்திரமாக வாழவேண்டும் என்பதற்காகத்தான் பல போராட்டங்கள் இடம்பெற்றன. தமிழ் பேசும் மக்களை அரவணைத்துக் கொண்டு பயணிப்பதே எமது நோக்கமாகும். சில முஸ்லிம் அரசியல் கட்சிகள் சலுகை அரசியலுக்காக தென்னிலங்கை வேட்பாளர்களின் பின்னால் நிற்கின்றன. சில தமிழ் அரசியல்வாதிகளும் இவ்வாறு உள்ளனர். முஸ்லிம் மக்கள் சிந்திக்கக் கூடியவர்கள் என்பதால் அவர்கள் சுதந்திரமாக தமது வாக்கைப் பயன்படுத்துவார்கள்.



**கேள்வி : தென்னிலங்கை வேட்பாளர்கள் மீது நீங்கள் விசனம் வெளியிட்டாலும்கூட தமிழ்ப்பொதுவேட்பாளர் கடைசி நேரத்தில் தென்னிலங்கையில் உள்ள பிரதான வேட்பாளரை ஆதரிக்க வேண்டிய நிலை ஏற்படுமா? இல்லையேல் தமிழ்ப் பொதுவேட்பாளர் உறுதியாக இறுதிவரை போட்டியிடுவாரா?**

**பதில் :** அவ்வாறானதொரு நிலை வராது. செப்ரெம்பர் 21 ஆம் திகதி தென்னிலங்கை வேட்பாளர்களுக்கு எமது மக்கள் நல்ல பாடத்தை படிப்பிப்பார்கள். ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச மற்றும் அநுரகுமார திஸாநாயக்க ஆகிய மூவரில் ஒருவர்தான் ஜனாதிபதியாக வருவார். அவர்களுக்கும் சிறந்த செய்தியை வழங்கும் வகையில் தமிழ்ப் பொதுவேட்பாளரை தமிழ் மக்கள் ஆதரிப்பார்கள். தமிழர்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர்.

எனவே, 9 ஆவது ஜனாதிபதியாக பதவியேற்கப் போகும் நபராவது அவரின் காலப்பகுதிக்குள் தீர்வை வழங்க வேண்டும் என்ற தகவலையும் வழங்கிவைப்பார்கள்.

**கேள்வி : ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமிழரசுக் கட்சியின் முடிவு எவ்வகையான தாக்கத்தை ஏற்படுத்தும்?**

**பதில் :** தமிழரசுக் கட்சியில் உள்ளவர்களும் தமிழர்கள்தானே? திருகோணமலை மாவட்டக் கிளை, கிளிநொச்சி மாவட்டக் கிளை என்பன தமிழ் பொதுவேட்பாளருக்கு ஆதரவு தெரிவித்துள்ளன. மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 90 சதவீதமான தமிழரசுக் கட்சி உறுப்பினர்களும் தமிழ்ப் பொதுவேட்பாளர் பின்னால் நிற்கின்றனர். தமிழரசுக் கட்சி முடிவெடுப்பதற்கு முதலே, தமிழ் பொதுவேட்பாளருக்கு வாக்களிக்கும் முடிவை தமிழ் மக்கள் எடுத்துவிட்டனர்.

**கேள்வி : தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு குறிப்பிட்டளவு வாக்குகளைப் பெறமுடியாவிட்டால் அது தமிழர்களின் பேரம் பேசும் சக்தியை பலவீனப்படுத்தும் எனவும் தமிழர்களுக்கு அரசியல் ரீதியில் பின்னடைவை ஏற்படுத்தக்கூடும் எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றதே?**

**பதில் :** 76 வருடங்கள் ஏமாற்றப்பட்டுவந்துள்ளோம். தற்போதும்கூட பின்னடைவான நிலையில்தான் உள்ளோம். முள்ளிவாய்க்கால் படுகொலையையும் நாம் பார்த்துள்ளோம். எவ்வித முயற்சியும் இன்றி தென்னிலங்கை வேட்பாளரை ஆதரித்திருந்தால்தான் அது பின்னடைவென கருதலாம். தமிழ்ப் பொதுவேட்பாளர் முயற்சியால் இனப்படுகொலையைவிட பின்னடைவு வரப்போவதில்லைதானே? எனவே, இது பற்றி யோசிக்கவேண்டியதில்லை. தென்னிலங்கை ஆட்சியாளர்களுக்கு ஒரு பாடத்தை படிப்பிக்க வேண்டும்.

**கேள்வி : தமிழ்ப் பொதுவேட்பாளர் விவகாரம் தேசிய ரீதியில் மட்டும் அல்ல சர்வதேச மட்டத்திலும் பேசுபொருளாக மாறியுள்ளது தமிழ்ப் பொதுவேட்பாளராக களமிறங்கியுள்ள உங்களுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏதேனும் ஏற்பட்டுள்ளதா?**

**பதில் :** இதுவரை அவ்வாறு எவ்வித அச்சுறுத்தலும் வரவில்லை. நீங்கள் கேட்பதைப் பார்க்கும்போது அச்சுறுத்தல் வரும்போல்தான் தெரிகின்றது.

**கேள்வி : தமிழ்ப் பொதுவேட்பாளர் முயற்சியின்போது மலையகத் தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனரா?**

**பதில் :** மலையக மக்களை நாம் ஒருபோதும் புறக்கணித்தது கிடையாது. இது விடயத்தில் மலையக மக்களுக்கும் சிறந்த புரிதல் உள்ளது. மலையகத்தில் உள்ள சில அரசியல் கட்சிகளே திட்டமிட்ட அடிப்படையில் இப்படியான தகவல்களைப் பரப்பிவருகின்றன.

மலையக மக்களின் அரசியல் வரலாறும், எமது அரசியல் வரலாறும் அன்று முதல் இன்றுவரை பின்னிப் பிணைந்தே காணப்படுகின்றன. மலையக மக்களையும் அரவணைத்தே அரசியல் தீர்வைக் காண்பதற்கு முயற்சிக்கின்றோம். மலையகத்தில் இருந்தும் எமக்கு அழைப்புகள் வருகின்றன.

தமிழ்ப் பொதுவேட்பாளர் வடக்கு, கிழக்கை விட்டு வேறு பகுதிகளுக்கு வரக்கூடாது என மனோ கணேசன் குறிப்பிட்டுள்ளார். அப்படியென்றால் தான் ஆதரிக்கும் தென்பகுதி வேட்பாளரும் வடக்கு, கிழக்குக்கு செல்லக்கூடாது என்பதையும் அவர் கூறினால் நன்றாக இருக்கும்.

**கேள்வி : ஆஸ்திரேலியா உட்பட புலம்பெயர் தேசங்களில் வாழும் தமிழர்களுக்கு நீங்கள் கூறும் செய்தி என்ன?**

**பதில் :** 12 முதல் 15 லட்சம்வரையான மக்கள் புலம்பெயர்ந்துள்ளனர்.அவர்கள் நன்கு சிந்திக்கக்கூடியவர்கள். அவர்களும், தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு அங்கீகாரம் வழங்கி, பூரண ஒத்துழைப்பை வழங்குவார்கள் என்ற உறுதியான நம்பிக்கை உள்ளது. எனவே, தாயகத்தில் உள்ள மக்களுக்கு அவர்கள் இது பற்றி தெளிவுபடுத்தி, தமிழ்ப் பொதுவேட்பாளரின் கரங்களைப் பலப்படுத்த வேண்டும்.



# ஈழம்: பொருளாதாரம் எனும் பொல்லாப் பேய்

● ஜெ.வேந்தன்

அப்போதெல்லாம் யுத்தம் நடந்தாலும் உயிர்ப் பயம் மட்டும் தான் இருந்தது. ஆனால் மூன்று நேரமும் சாப்பிடவும் பிரச்சினைகள் இல்லாமல் நிம்மதியாகவும் இருந்தம். ஆனால் இப்ப ஒரு நேரம் வயிராற சாப்பிடுறதுக்கே யோசிக்க வேண்டி இருக்கு" என்கிறார் கிளிநொச்சியில் வசிக்கும் பெண் தலைமைக் குடும்பத்தைச் சேர்ந்த மஞ்சுளவதனி.

நாட்டில் ஏற்பட்ட அரசியல் பொருளாதார நெருக்கடிகளில் சிறுபான்மைச் சமூகத்தை சேர்ந்த மக்களும் பெண்தலைமைக் குடும்பங்களும் எதிர் நோக்கியுள்ள பிரச்சினைகள் எண்ணற்றவை. மஞ்சுளவதனி போன்றோரின் குடும்பங்கள் வடக்கில் எண்ணற்றவை உள்ள போதும் அவர்களின் பிரச்சினைகளும் தீர்வில்லாமலேயே தொடர்கின்றன.

கணவனை யுத்தத்தில் இழந்தபோதும் தனது மூன்று பெண் பிள்ளைகளினதும் எதிர்காலம் பாதுகாப்பாக அமைய வேண்டும் என்பதற்காக பொருளாதர சுமைகளைப் பொருட்படுத்தாது கூலி வேலை செய்து தனது குடும்பத்தை நடத்திச் செல்கின்றார் மஞ்சுளவதனி.

"சம்பளம் 1500 ரூபாவும் சில இடங்களில 2000 ரூபாவும் தான் தருகினம். இதைக்கொண்டு தான் எல்லாத்தையும் பார்க்கோணும் எண்டால் எப்பிடி முடியும்? " நிரந்தரமற்ற வேலையும் குறைந்த ஊதியத்தையும் கொண்டு நான்கு பெண்கள் ஒரு குடும்பத்தில் வாழ்வதென்பது தற்போதைய பொருளாதார சூழலில் மிகவும் இக்கட்டான நிலையாகவே உள்ளது.

" சொந்தமாகத் தொழில் ஒண்ட செய்ய லோன் எடுக்கலாம் எண்டா அதுக்கு இரண்டு அரச உத்தியோகத்தர் கையெழுத்து வைக்கோனும் எண்டினம். எங்கள நம்பி யார் கையெழுத்து வைப்பினம்.?" என்கிறார், கணவன் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட குடும்பத்தை சேர்ந்த வவுனியாவில் வசிக்கும் நான்கு பிள்ளைகளின் தாய் நந்தகுமாரி .

கணவன் காணாமல் ஆக்கப்பட்ட வேதனைகளோடும் பொருளாதார சுமையோடும் குடும்பத்தை எப்படி கொண்டு செல்வது என்று சிந்திக்க முன்னரே காலம் ஓடிவிடுகின்றது.

" எங்கள நம்பி தொழில் செய்ய கடன் தாறதுக்கு யாரும் முன் வாறதில்ல. அதால எங்களுக்கும் வேற வழி இல்லாம தான் மைக்கிறோ பினான்சில கடன் வாங்கிறம். வட்டி வீதம் கூடவாகத் தான் இருக்கு. ஆனால் எங்கட தேவைய முடிக்க வேற வழி இல்லையே. நான் வேலைக்கு போறதில்ல. கணவர் தான் கிடைக்கிற எந்த வேலைக்கும் போய் உழைக்கிறார். அதவைச்சு இப்பத்த விலை வாசிக்க என்னதான் செய்ய ஏலும்? சாப்பாட்டு சாமான் வாங்கவே காணாது. 1000 ரூபா கொண்டு போனால் ஒரு சொப்பின்ல கூட சாமான் வாங்கேலே. அதால கடனும் வாங்கிட்டம். இப்ப பொருளாதார நிலம படுமோசமாக இருக்கு. என்ன செய்றதெண்டு தெரியேல்ல" என்கிறார் கனகராயன் குளத்தை சேர்ந்த நிரோசனி என்ற குடும்ப தலைவி.

அத்துடன் இந்நிலையிலிருந்து மீள வெளிநாடு செல்ல எண்ணி முகவர் ஒருவரிடம் ஒரு தொகை பணத்தை தாம் வழங்கியபோதும் இறுதியில் அந்தப் பணமும் ஏமாற்றப்பட்டு, இப்போது அதிக கடனில் மூழ்கி உள்ளதாக அவர் தெரிவிக்கின்றார் .

வடக்கில் வாழும் மக்கள் தமது குடும்பத்தின் வாழ்வாதாரத் துக்காகப் படுகின்ற இடர்கள் அதிகரித்தவண்ணமே உள்ளன. எத்தகைய விழிப்புணர்வுகளை மக்கள் மத்தியில் மேற்கொண்டாலும் மக்கள் அடுத்த நாள் என்ன செய்ய போகின்றோம் என்பதைப் பற்றி சிந்திக்கும் நிலையிலேயே உள்ளனர்.

ஏ-9 சாலையில் பயணிக்கும் பேருந்துகளில் ஏறி பயணிகள் மத்தியில் சிற்றுண்டிகளை விற்பனைசெய்யும், கிளிநொச்சியைச் சேர்ந்த திருமதி க. ராமன் இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில், "முதலெல்லாம் ஒரு பஸ்ல ஏறினால் குறைஞ்சது ஆயிரம் ரூபாயாவது கிடைக்கும். சனம் கச்சான், மிக்சர், தண்ணீர் போத்தல் என்று எதையாவது வாங்கும். இப்ப என்னதான் கூட்ட நெரிசலோட பஸ் வந்தாலும், ஏறி இறங்கிறதுதான் மிச்சம். ஒரு நூறு ரூபாய்க்குக்கூட சனம் எதுவும் வாங்கிறதில்லை. சனத்திட்ட காசில்லை. நானும் இந்தத் தொழில விட்டுப்போட்டு பிச்சையெடுக்கப் போகப்போறன்" என்றார். அவரின் இந்தச் சிறு வசனத்தில், மக்களின் நாளாந்த பொருளாதார நிலை எவ்வளவு மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்பதை அறியமுடிகின்றது. திருமதி ராமன் போன்ற சிறுவியாபாரிகள் இந்தப் பொருளாதாரப் பேரிடரினால் தம் தொழிலையே இழக்கும் நிலைக்குள்ளாகிவிட்டனர் என்பதையும் அறியமுடிகின்றது.

இலங்கையின் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் பொருளாதார ரீதியில் ஓரளவுக்கு முன்னேறியிருக்கும் யாழ்ப்பாணத்திலும், வறுமைப்பட்ட மக்கள் மேலும் வறுமைக்குள்ளேயே தள்ளப்பட்டிருக்கின்றனர்.

யாழ்.பண்ணைக் கடற்கரையில் கச்சான்கடை நடத்திவரும், ஆரியமலர், "எனக்கு மாற்று உடுப்புக்கூட இல்ல. யாராவது வீட்டில் கழிச்சுவிட்ட உடுப்புகள் இருந்தால் கொண்டு வந்து தாங்கோ. பேரன் பள்ளிக்கூட காற்சட்டை தைக்க காசில்லாததால் படிப்பையே விட்டிட்டான். வீட்டிலும் அவ்வளவு கஸ்ரம். ஒரு நாளைக்கு ஒரு வேளை சாப்பாடுதான். நான் என்ர உயிர் இருக்கும் வரைக்கும் உழைச்சு சாப்பிட வேணும் என்றதுக்காகத்தான் இந்த கடைய நடத்திக்கொண்டிருக்கிறன். இப்பவெல்லாம் இதில எந்த வருமானமும் இல்லை" எனத் தெரிவித்தார்.

இதேவேளை வடக்கில் உள்ள இளைஞர்களின் நிலை பற்றி ஆராய்ந்தபோது, அவர்களின்நிலைகளில் சில மாறுபாடுகள் காணப்படுகின்றதை அவதானிக்க முடிந்தது. பல இளைஞர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதையே குறிக்கோளாக கொண்டுள்ளார்கள். எந்த நாடென்றாலும் பரவாயில்லை, இங்கு இனி வாழ முடியாது. எங்களது எதிர்காலம் கேள்விக்குறியாகவிடும் என்ற பயம் இளையோர் மத்தில் வேரூன்றத் தொடங்கியுள்ளது.

"கோடிக்கணக்கில காசு குடுத்து விசா எடுத்து வெளிய போறதுக்கு எனக்கு வசதியில்ல. அதால வேற வழியால போகத்தான் இப்ப நான் இருக்கிறன்" என்கிறார் முல்லைத்தீவை சேர்ந்த இளைஞர் ஜெகன். "இளமை காலத்தை யுத்தத்தில தொலைச்சிட்டம். இப்ப மிஞ்சின காலத்தையும் இப்பிடி பசி பட்டினியோட நிம்மதி இல்லாம வாழ ஏலாது . எங்கட பிள்ளையளுக்காவது நல்ல எதிர்காலத்த குடுக்கோனும் எண்டதுக்காகத்தான் இந்த நாட்ட விட்டு எப்பிடியாவது ஏதாவது ஒரு நாட்டுக்கு போயிடோணும் எண்டு இருக்கிறம்.

மனதில், ஒவ்வொரு நாளும் என்ன செய்யப்போறம் எண்டது மட்டும் தான் யோசிக்க வேண்டியிருக்கு. இப்பிடி இஞ்ச உள்ள அரசியல் பொருளாதார பிரச்சினைகளாலதான் என்னை மாதிரி இளம் பெடியள் எல்லாம் சட்ட விரோதமா எண்டாலும், எஜென்சிய பிடிச்சு எங்கயாவது ஒரு நாட்டுக்கு போயிடோனும் எண்டு போறாங்கள். வேற வழியும் இல்ல தானே. வருமானம் காணாது. சட்ட ரீதியா போக வசதியும் இல்ல. காலமும் இல்ல. அதனால தான் உயிர் போனாலும் பரவாயில்ல எண்டு பணயம் வைச்சு போறம். எங்களுக்கும் இந்த நாட்டில குடும்பத்தோட சொந்தங்களோட வாழ ஆசை தான். ஆனாலும் என்ன செய்ய முடியும்? இந்த பொருளாதாரப் பிரச்சினையால வேற வழி இல்லையே. எல்லாம் ஒரு நாள் மாறும். மாறோணும் எண்டது தான் எங்கட ஆசை. ஆனால் இதெல்லாம் கனவா தான் போகும்". இவ்வாறு வடக்கில் உள்ள இளைஞர்களும் பெண்களும் நாட்டில் உள்ள பொருளாதார நிலைமைகளால் பாதிக்கப்பட்டு, விரக்தியுடன் வாழும் நிலையிலேயே உள்ளனர்

எப்பொழுதும் சமூகத்தில் வசதியாகவோ உயர் மட்டத்திலோ இருப்பவர்களுக்கு இது ஒரு பிரச்சினையாகத் தெரியாது. ஆனால் நடுத்தர மற்றும் அடிநிலை மக்களின் நிலையில் இருந்து வாழும்போது இந்த நிலை மிக மோசமானதாகவே இருக்கும் என்பதுடன் பாதிப்பு என்பது எப்பொழுதும் அடிநிலை மக்களையே சாருகின்றது.

(15ஆம் பக்கம் பார்க்க)

# ஈழம்: பொருளாதாரம் எனும் பொல்லாப் பேய்

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன் அரசியல் பொருளாதார பாதிப்புக்களால் சிறுபான்மை சமூகங்களிடையே புதிதாக அதிகரித்த ஒரு விடயமாக போதைப்பொருள் பாவனை காணப்படுகின்றது. சாதாரணமாக பாடசாலை மாணவர்கள் முதல் இளைஞர் யுவதிகள் வரை அனைவருக்கும் கிடைக்குமளவுக்கு மலிந்திருக்கின்றது என்றால் சிறுபான்மை சமூகங்களின் மீதான பொருளாதார சுரண்டல் எவ்வாறு இலக்கு வைக்கப்பட்டிருக்கின்றது என்பதை புரிந்துகொள்ளலாம்.

“ எப்பொழுது இந்த சமூகத்தில் போதைப்பொருள் பாவனை அதிகம் பரவத்தொடங்கியதோ அன்றே பொருளாதார சுமை பெண்களின் மேல் ஏற்றப்பட்டு, அது குடும்ப வன்முறைகளின் வடிவமாக மாற்றப்பட்டிருக்கிறது” என சட்டத்தரணியும் சமூகச் செயற்பாட்டாளருமான திருமதி. றணித்தா ஞானராஜா தெரிவித்தார் .

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கும்போது, ”தற்போது குற்றங்களின் வகைகள் வித்தியாசமான காரணங்களுக்காக, வித்தியாசமான வகைகளில் இடம்பெற்றுள்ளதை அறிக்கையிடப்படுவதை காணக்கூடியதாக உள்ளது. இந்த குடுப்ப வன்முறைகளால் பிள்ளைகளும் சேர்ந்தே பாதிக்கப்படுகின்றார்கள். தற்போது நீதிமன்றுக்கு வரும் விவாகரத்து வழக்குகளும் பராமரிப்பு வழக்குகளும் அதிகரித்திருக்கின்றன. பொருளாதார நெருக்கடிகளால் குடும்பங்களை நடத்தி செல்ல முடியாமல் குடும்பத்தில் முரண்பாடாகி விவாகரத்தில் வந்து நிற்கின்றது . பராமரிப்பு வழக்குகளிலும் 60 - 70 வீதமான வழக்குகள் பராமரிப்பு தொகைகள் செலுத்தப்படுவதில்லை. போதிய வருமானம் இன்மை, போதைப்பொருள் பாவனைகளால், துணையாளர் கோரும் தொகையை அவர்களால் செலுத்த முடியாதுள்ளது. இதேவேளை நுண்நிதி நிறுவனங்கள் மூலமும், சிறுபான்மை சமூகங்கள் அதிலும் குறிப்பாக தமிழ் மக்கள் இலக்கு வைக்கப்பட்டு சுரண்டல்களுக்கு உட்படுத்தப்படுகிறார்கள். இதற்கு காரணம் இது தொடர்பில் மக்களுக்கு போதிய விழிப்புணர்வு இன்மை. நுண்நிதி நிறுவனங்களும் அடிப்படை வசதிகள் அற்ற அல்லது பின்தங்கிய கிராம மக்களைத்தான் அதிகளவில் இலக்குவைக்கின்றனர். ஏனெனில் அவர்களைத்தான் இலகுவாக ஏமாற்றமுடியும். அவர்களைத்தான் இலகுவில் அச்சுறுத்த முடியும். கடனளிக்கும் பணத்தைப் பன்மடங்காக மீளப் பெற்றுக்கொள்ள முடியும். ”

“ஐம்பதாயிரம் கடன் வாங்கினால் நாற்பதாயிரம் கட்டி முடியும் வரை வரை ஒழுங்காக வந்து வாங்கி செல்வார்கள். பின்பு ஐந்து, ஆறு தவணைகள் வரமாட்டர்கள் . அதன் வட்டியை அதிகரிக்கச்செய்து, அதன்பின்னரே வந்து வாங்குவார்கள்” எனப் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கிறார்கள் .இப்படி ஒரு தந்திரமாக தான் மக்களை ஏமாற்றி நுண்நிதி நிறுவனங்கள் பொருளாதாரச் சுரண்டல்களை செய்து கொண்டிருக்கின்றன. இதனை மக்கள் விளங்கிக் கொள்ளவேண்டும். கடன் தேவை என்றால் சமுர்த்தி வங்கி, கிராமிய அபிவிருத்தி வங்கிகள் ஊடகப் பெற்றுக்கொள்ள முடியும். அந்த வங்கிகளில் பாதுகாப்பும், வட்டி வீதமும் குறைவாகத் தான் உள்ளது.

இலங்கையைப் பொறுத்தவரை நிதிநிறுவனங்களிலோ கடன் வழங்கும் ஏற்பாடுகளிலோ மாற்றம் கொண்டு வருவதற்கு அரசிற்கு வழி இல்லை. ஏனெனில் ஏற்கனவே உள்ள பொருளாதார சிக்கலில் இருந்து இன்னும் சிக்கலிற்குள்ளேயே செல்ல வேண்டி வரும் என்பதால் அந்த விடயத்தில் அரசு அதிக அக்கறை செலுத்துவதில்லை.

இலங்கையில் சிறுபான்மை மக்களின் இந்நிலை மாற வேண்டும் என்றால் இன்னும் சில காலம் செல்லும். இதனை கட்டியெழுப்பிய பின்னர்தான், இலங்கை வாழ் மக்கள் சாதாரண நிலைக்கு வரமுடியும்.

சாதாரண நிலை என்பது எவ்வளவு காலத்திற்கு என்பதை ஒரு சட்டத்தரணியாக இருந்து என்னால் தெரிவிக்க முடியாது. ஆனால் பொது உரிமைகள் சார்ந்து செநற்படும் செயற்பாட்டாளர் என்ற என்ற அடிப்படையில் சொல்வதென்றால், அது இன்று நாளை முடியக்கூடிய விடயம் இல்லை. நாங்கள் ஆட்சி மாற்றம் கொண்டு வந்தாலும் சட்ட திட்டங்களை இறுக்கினாலும் சிறுபான்மை சமூகங்களின் அரசியல் பொருளாதார ரீதியல் ஏற்பட்டுள்ள தாக்கம் ஒரு விடிவுக்கு வர ஒரு தசாப்தம் என்றாலும் எடுக்கும்” என தெரிவித்தார்.

அரசியல் ரீதியிலான மாற்றம் என்பது சிறுபான்மை சமூகங்களைப் பொறுத்தவரை உருவ வேறுபாடு தானே தவிர இந்தச்சமூகங்களை பொறுத்தவரை அவர்களின் செநற்பாடுகள் ஒரே மாதிரிதான் இருக்கப்போகின்றன என்பதே கடந்த கால வரலாறு.

ஆனாலும் இதுவரை அரசியல் பொருளாதார நெருக்கடியின் தாக்கத்திற்கு உட்பட்டிருந்த இளைஞர் யுவதிகளும் சிறுபான்மை மக்களும் தற்போது தமக்கான விடிவு காலத்தை நோக்கி நம்பிக்கையுடன் முன்னேறிச்செல்கின்றமை எதிர்காலத்தில் இம் மக்கள் மத்தியில் ஒரு நிரந்தரமான விடியலை ஏற்படுத்தும் என்பது திண்ணம்.




தாயக கலாசார
ஆபரணங்கள்
மெல்பேர்ணில்...
லக்கி
நகைத் தொழிலகம்
LUCKY JEWELLERY
பொன்னுருக்குதல்
தாலி செய்தல்
கல்யாண மோதிரம்
காது குத்துதல்
தமிழ் எழுத்துகளில் ஆபரணங்கள்
திருத்த வேலைகள் உடனடியாக
14/38 Mccrae Street, Dandenong VIC3175
LuckyJewelleryMelborne
luckysankaran@gmail.com
0387121974, 0415233284



# மகாவிஷ்ணு மற்றும் போலிச்சாமியர்கள்: நம்பிக்கைகளின் பின்னணியில் உள்ள வியாபாரம்

மகாவிஷ்ணு என்ற பெயரில் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட ஆன்மீகப் பேச்சாளர் சமீபத்தில் சென்னையில் உள்ள ஒரு அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பேசியது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. அவர் பேசியது, மாணவர்களுக்கு மூடநம்பிக்கைகளை ஊக்குவிக்கும் வகையில் இருந்தது என்று பலர் குற்றம்சாட்டினர். இதனால், அவரை பள்ளி நிர்வாகம் மற்றும் சமூக ஆர்வலர்கள் கடுமையாக விமர்சித்தனர். மகாவிஷ்ணு, தன்னை குருஜி என அழைத்துக் கொண்டு, ஆன்மீகச் சொற்பொழிவுகளை நடத்தி வருகிறார். அவர் சமீபத்தில் ஆஸ்திரேலியாவுக்கு வருகை தந்து, அங்கு ஒரு ஆசிரமத்தைப் பதிவு செய்துள்ளார். இந்த இளம் வயது போலிச்சாமியார், ஈழத்தமிழர்களின் ஆதரவுடன், மிகப்பெரிய வியாபார வேட்டையை நடத்தி வருவதாகக் கூறப்படுகிறது.

### தமிழாசிரியர் சங்கரின் அறச் சீற்றம் மற்றும் தமிழகத்தின் கொந்தளிப்பு

மகாவிஷ்ணுவின் சர்ச்சைக்குரிய பேச்சுக்கு எதிராக, சங்கர் என்ற மாற்றுத் திறனாளி தமிழ் ஆசிரியர் தனது அறச்சீற்றத்தை வெளிப்படுத்தினார். மகாவிஷ்ணு, மாற்றுத் திறனாளிகள் முன்ஜென்ம பாவங்களால் பிறக்கின்றனர் என்று கூறியதற்கு சங்கர் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்தார். இந்த வீடியோ காட்சிகள் சமூக ஊடகங்களில் பரவியதும், தமிழகத்தில் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டது.

மானமிகு தமிழாசிரியர் சங்கர் அவர்களின் அறச் சீற்றம், மாற்றுத் திறனாளிகள் மற்றும் சமூக ஆர்வலர்களின் ஆதரவைப் பெற்றது. பல மாணவர் அமைப்புகள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் சங்கங்கள், மகாவிஷ்ணுவின் பேச்சுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தின. இதனால், தமிழக பள்ளிக் கல்வி துறை அமைச்சர் அன்பில் மகேஸ், மகாவிஷ்ணுவின் பேச்சு குறித்து விசாரணை நடத்த உத்தரவிட்டார்.

### கல்வி அமைச்சரின் எதிர் நடவடிக்கைகள்

அசோக் நகர் மற்றும் சைதாப்பேட்டையில் உள்ள அரசுப் பள்ளிகளில் மகாவிஷ்ணுவின் சொற்பொழிவுகள் நடந்ததைத் தொடர்ந்து, பள்ளிக் கல்வி துறை சார்பில் விசாரணை குழு அமைக்கப்பட்டது. அசோக் நகர் அரசுப் பள்ளியில் 'கல்வியே சமத்துவம் மலரச் செய்யும் மிகப்பெரிய ஆயுதம்' என்ற தலைப்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. பள்ளிக் கல்வி அமைச்சர் அன்பில் மகேஸ் மற்றும் துறை உயர் அதிகாரிகள் இதில் பங்கேற்றனர்.

சர்ச்சை பேச்சுக்கு எதிர்ப்பு தெரிவித்த மானமிகு ஆசிரியர் சங்கருக்கு இக்கூட்டத்தில் பாராட்டு தெரிவிக்கப்பட்டது. பின்னர், செய்தியாளர்களிடம் அமைச்சர் அன்பில் மகேஸ் கூறியபோது, இந்த விவகாரம் தொடர்பாக பள்ளிக்கல்வி துறை இயக்குநர் தலைமையில் விசாரணை குழு அமைக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்டவர்கள் மீதுதுறை ரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார்.

ஆஸ்திரேலியாவில் இருந்து திரும்பிய மகாவிஷ்ணு மீது 5 பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, அவர் நீதிமன்ற காவலில் சிறையில் அடைக்கப்பட்டார்.

### ஆஸ்திரேலியாவில் சத்சங்கம்

இந்நிலையில் நான்கு மாதங்களுக்கு முன் வருகை தந்த இந்த மூடநம்பிக்கைப் பேச்சாளர் தனது பணவேட்டைக்கான களமாக ஆஸ்திரேலியாவை உறுதி செய்திருக்கிறார். தற்போதைய இரண்டாவது பயணத்தில், ஆஸ்திரேலியாவில் ஒரு ஆசிரமத்தை, ஆன்மீக பயிற்சிகள் மற்றும் சடங்குகளை நடத்துவதற்காக ஒரு தனியார் நிறுவனமாகப் பதிவு செய்திருக்கிறார். இதன் மூலம், மக்களின் நம்பிக்கைகளைப் பயன்படுத்தி, வியாபாரத் திட்டத்தை செயல்படுத்தியிருக்கிறார். இது போன்ற போலிச்சாமியார்கள், மக்களின், குறிப்பாக ஈழத்தமிழ் மக்களின் கண்மூடித்தனமான நம்பிக்கைகளை தவறாக பயன்படுத்தி, அவர்களின் பணத்தை சுருட்டி வருவது புதிதல்ல. இருந்தாலும் இந்தச் சிறுவயது சாமியாரின் காலில் விழுவது எல்லாம் கேவலமான சுயமரியாதையற்ற செயல்.

### குறுகிய காலத்தில் பெறுகிய வருமானம்

மகாவிஷ்ணு குறுகிய காலத்தில் பிரபலமடைந்தது, அவரது திறமையான சுய விளம்பர யுத்தியும், சமூக ஊடகங்களை திறம்பட பயன்படுத்தியதுமே காரணமாகும். அவர் தனது ஆன்மீகச் சொற்பொழிவுகளை யூடியூப் மற்றும் பிற சமூக ஊடகங்களில் வெளியிட்டு, பலரின் கவனத்தை ஈர்த்தார். மேலும், அவர் பல நாடுகளில், குறிப்பாக இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் ஆன்மீகச் சொற்பொழிவுகளை நடத்தி, அங்கு உள்ள தமிழ் மக்களின் ஆதரவைப் பெற்றார். மகாவிஷ்ணுவுக்கு நிதி அளிப்பவர்கள், பெரும்பாலும் அவரது சொற்பொழிவுகளைக் கேட்டு, அவரின் நம்பிக்கைகளைப் பகிர்ந்து கொள்ளும் ஆன்மீக ஆர்வலர்கள் மற்றும் ஈழத்தமிழர்கள் ஆவர். இவர்களின் நிதி ஆதரவு, அவரது ஆசிரமங்கள் மற்றும் ஆன்மீக நிகழ்ச்சிகளை நடத்த உதவுகிறது. மேலும், அவர் ஆன்லைன் மூலம் ருத்திராட்சம், கருங்காலி மாலை போன்ற பொருட்களை விற்பனை செய்து, கூடுதல் வருமானம் பெறுகிறார்.

மகாவிஷ்ணுவுக்குப் பின்னால் இருக்கும் அமைப்புகள், அவரது சொற்பொழிவுகளை ஏற்பாடு செய்யும் மற்றும் நிதி ஆதரவு வழங்கும் அமைப்புகள் ஆகும். இவர்கள் யார் என்பது இன்னும் வெளிச்சத்திற்கு வரவில்லை. உதாரணமாக, அவர் திருப்பூரில் 'பரம்பொருள் பவுண்டேஷன்' என்ற அறக்கட்டளையை துவங்கி, ஆன்மீக தேடலுக்கான கட்டண வகுப்புகளை நடத்தி வருகிறார். இந்த அமைப்புகள், மக்களின் நம்பிக்கைகளை பயன்படுத்தி, அவர்களின் பணத்தை சுருட்டும் வியாபாரமாகச் செயற்படுகின்றன.

### வரும்முன் காப்போம்

மகாவிஷ்ணு போன்ற ஆன்மீகப் பேச்சாளர்களிடமிருந்து நம்மைக் காத்துக் கொள்வது மிகவும் முக்கியம். இதற்கான சில வழிகள்:

1. கல்வி மற்றும் விழிப்புணர்வு: அறிவியல் மற்றும் தரவுகளின் அடிப்படையில் நம்பிக்கைகளை உருவாக்குவது முக்கியம். பள்ளி மற்றும் கல்லூரிகளில் அறிவியல் கல்வியை வலுப்படுத்துவது மூடநம்பிக்கைகளை குறைக்க உதவும்.
2. விமர்சனச் சிந்தனை: எந்த தகவலையும் விமர்சனச் சிந்தனையுடன் அணுகுவது முக்கியம். தகவல்களை பரிசீலித்து, அதன் உண்மைத்தன்மையை ஆராய்ந்து, அதன் பின்னணியை புரிந்து கொள்ள வேண்டும்.
3. நம்பகமான ஆதாரங்கள்: தகவல்களை நம்பகமான மற்றும் பரிசீலிக்கப்பட்ட ஆதாரங்களில் இருந்து பெறுவது முக்கியம். சமூக ஊடகங்களில் பரவும் தவறான தகவல்களை நம்பாமல், உண்மையான தகவல்களை அறிந்து கொள்ள வேண்டும்.
4. சமூக விழிப்புணர்வு: சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துவது முக்கியம்.
5. ஆன்மீக நம்பிக்கைகளின் பின்னணியை அறிதல்: ஆன்மீக நம்பிக்கைகளின் பின்னணியை அறிந்து, அதன் உண்மைத்தன்மையை புரிந்து கொள்ள வேண்டும். இது, மூடநம்பிக்கைகளை தவிர்க்க உதவும்.
6. தன்னம்பிக்கை: தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டும். தன்னம்பிக்கை இல்லாதவர்கள், போலிச்சாமியார்களின் வலையில் சிக்கக்கூடியவர்கள். தன்னம்பிக்கை மற்றும் சுயநம்பிக்கை வளர்த்துக் கொள்ள, அறிவு மற்றும் அறிவியல் அடிப்படையில் நம்பிக்கைகளை உருவாக்க வேண்டும்.

இந்த வழிகளைப் பின்பற்றுவதன் மூலம், போலிச்சாமியார்களிடமிருந்தும், அதிகப்படியான பக்தி சார்ந்த மூடநம்பிக்கைகளிலும் இருந்து நம்மைக் காத்துக் கொள்ள முடியும்.

மகாவிஷ்ணு போன்ற போலிச்சாமியர்கள் மற்றும் அவர்களின் செயற்பாடுகள், பெரியார் மற்றும் அம்பேத்கர் போன்ற சமூக மாற்றத்தை முன்னெடுத்தவர்களின் கொள்கைகளின் முக்கியத்துவத்தை மீண்டும் உணர்த்துகின்றன.

இது போன்று போலிச்சாமியார்களின் செயற்பாடுகளை வெளிச்சம் போட்டு காட்டுவது, மக்கள் விழிப்புணர்வை அதிகரித்து, மூடநம்பிக்கைகளை தவிர்க்க உதவும். இது, சமூகத்தில் நம்பிக்கைகளை தவறாக பயன்படுத்தி, மக்களின் பணத்தை சுருட்டும் செயல்களை குறைக்கவும் உதவும்.







ஆஸ்திரேலிய தமிழ் வர்த்தக சங்க விக்டோரிய கிளையின் வருடாந்த ஒன்று கூடல் நிகழ்வு அண்மையில் விக்டோரிய தமிழ் சங்க மண்டபத்தில் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டவர்களின் படங்களை இங்கு காணலாம்.

**PAINTING SERVICES**
**INTERIOR AND EXTERIOR**



**TIMBER FLOORING**
**supply and installation**



**DECKING**



**BUDGET FRIENDLY HOME IMPROVEMENTS**
**Contact : 040 0287 198**

# இரண்டாவது லெபனான் போர்?

## ஹிஸ்புல்லா தாக்குதலும் இஸ்ரேல் பதிலடியும்!

● ஐங்கரன் விக்கினேஸ்வரா

லெபனானில் செயற்பட்டு வரும் ஈரான் ஆதரவு பெற்ற ஹிஸ்புல்லா அமைப்பு, எல்லையில் இஸ்ரேல் ராணுவத்துடன் தொடர்ந்து மோதலில் ஈடுபட்டு வருகிறது.



இஸ்ரேலின் இராணுவத் தளங்களை குறிவைத்து, 300 க்கும் மேற்பட்ட ரொக்கெட், ஏவு கணைகள், ட்ரோன்களை ஏவி தாக்குதல் நடத்தியது. இதில், இஸ்ரேலியத் தலைநகர் டெல் அவிவ் அருகே உள்ள இஸ்ரேலின் உளவு அமைப்பான மொசாட்டின் தலைமையகமும் குறிவைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

தற்போது இஸ்ரேல் மற்றும் ஹிஸ்புல்லா இடையிலான மோதல் தீவிரமடைந்துள்ளது. இந்நிலையில், லெபனான் மீதான தாக்குதல் தங்கள் தேசத்தை தற்காத்துக் கொள்வதற்கான உரிமை என இஸ்ரேல் ஜனாதிபதி ஐசக் ஹெர்சோக் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலின் இராணுவத் தளங்களைக் குறிவைத்து சுமார் 300-க்கும் மேற்பட்ட ஏவுகணைகளை ஏவி தாக்குதல் மேற்கொண்டதாக ஹிஸ்புல்லா அமைப்பு ஒகஸ்ட் 25 இல் தெரிவித்தது. இஸ்ரேல் தரப்பிலும் லெபனான் மீது தொடர் தாக்குதல் நடத்தப்பட்டது.

"நாங்கள் கண்டறிந்த தீவிரவாத அச்சுறுத்தலுக்கு எதிராக தேசத்தையும், மக்களையும் தற்காத்துக் கொள்வதற்கான உரிமை மற்றும் கடமை இஸ்ரேலுக்கு உள்ளது. இதனால் லெபனான் மீது தாக்குதல் தொடுத்துள்ளோம்" என இஸ்ரேலிய ஜனாதிபதி ஐசக் ஹெர்சோக் தெரிவித்துள்ளார்.

### தாக்குதலுக்கான காரணம் என்ன?

கடந்த மாதம் ஹிஸ்புல்லா உயர்மட்டத் தலைவர் ஃபவத் ஷூக்ர் கொல்லப்பட்டதற்கு பதிலடியாக இஸ்ரேலுக்கு எதிராக ரொக்கெட் மற்றும் ட்ரோன் தாக்குதல் தொடுத்துள்ளதாக ஹிஸ்புல்லா தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காஸா போர் நிறுத்தம் மற்றும் பிணைக்கைதிகள் விடுவிப்பு போன்ற காரணங்களால் தாக்குதலை தாமதப்படுத்தியதாகவும் ஹிஸ்புல்லா தெரிவித்தது. இந்நிலையில், ஹிஸ்புல்லாவின் ட்ரோன் தாக்குதலை இடைமறித்துவிட்டதாக இஸ்ரேல் இராணுவம் கூறுகின்றது.

தொடர்ந்து ஹிஸ்புல்லா மீது தீவிர தாக்குதல் நடத்தப்படும் என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

### லெபனான் மீது தாக்குதல்

ஹிஸ்புல்லா அமைப்பு தாக்குதலை தொடுப்பதற்கு முன்பாகவே, லெபனான் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது. "இஸ்ரேலுக்கு எதிராக ஹிஸ்புல்லாக்கள் பெரிய அளவில் தாக்குதல் நடத்த திட்டமிட்டிருப்பதை நாங்கள் முன்கூட்டியே கண்டறிந்தோம்" என இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலிய மக்கள் மீதான அச்சுறுத்தலை தணிக்கும் விதமாக, இஸ்ரேலிய இராணுவ விமானங்கள் ஹில்புல்லாக்களின் இலக்குகளை நோக்கி நிலைநிறுத்தப்பட்டுள்ளன.

தெற்கு லெபனானில், வடக்கு மற்றும் மத்திய இஸ்ரேல் பகுதிகளை இலக்காக கொண்ட ஹிஸ்புல்லாக்களின் நூற்றுக்கணக்கான ரொக்கெட் லோஞ்சர்களை எங்கள் விமானங்கள் தாக்கி அழித்தன என இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் ராணுவம் வெளியிட்டுள்ள அறிக்கையில், சுமார் 100 போர் விமானங்கள், தெற்கு லெபனானில் உள்ள ஹில்புல்லாக்களின் ரொக்கெட் லோஞ்சர்களை தாக்கி அழித்தன. இவைகளில் பல வடக்கு இஸ்ரேல் மற்றும் மத்திய இஸ்ரேலை குறிவைத்து இருந்தன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 2 ஆவது லெபனான் போர் - இஸ்ரேல் எச்சரிக்கை

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் அதிகரித்துள்ள பதற்றத்துக்கு பதில் அளித்துள்ள அமெரிக்கா, இஸ்ரேலின் தற்காப்பு நடவடிக்கைக்கு தொடர்ந்து ஆதரவளிப்பதாகத் தெரிவித்துள்ளது.

காஸா போர் தொடங்கியதில் இருந்து இஸ்ரேல் மற்றும் ஹிஸ்புல்லா அமைப்புக்கு இடையேயான இந்த மோதல் தொடர்ந்து வருகிறது. இந்தச் சூழலில் தற்போதைய இந்தத் தாக்குதல் லெபனானில் முழு அளவிலான தாக்குதல் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

"நாங்கள் போரை விரும்பவில்லை, ஆனால் ஹிஸ்புல்லா போரை விரும்பினால் விளைவுகள் மோசமானதாக இருக்கும்" என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஒருபுறம் காஸா பகுதியில் ஹமாஸ் அமைப்பு நிலைகளை குறிவைத்து இஸ்ரேல் இராணுவம் தாக்குதல் நடத்தி வரும் நிலையில், தெற்கு லெபனானில் சரமாரியாக ஏவுகணைத் தாக்குதல் நடத்தி வருவதாக இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் - ஹமாஸ் இடையிலான போர் நடந்து வரும் நிலையில், கடந்த நாட்களில் தெற்கு லெபனானின் பல பகுதிகளில் உட்புகுந்து தாக்குதல் நடத்தியுள்ளதாக இஸ்ரேல் விமானப்படை தெரிவித்துள்ளது. ஆனால் ஹமாஸ் அமைப்பினரைப் போல் அல்லாமல் ஹிஸ்புல்லா போராளிகள் கடுமையான எதிர்த் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.



### ஹிஸ்புல்லா - கடவுளின் கட்சி

ஹிஸ்புல்லா என்றால் அரபு மொழியில் கடவுளின் கட்சி என்று பொருள். 1980களில் கிடைத்த எண்ணெய் வளம், மேற்கத்திய நாடுகளின் பார்வையை மத்திய கிழக்கு வளைகுடா பிராந்தியத்தை நோக்கித் திரும்பியது.

அப்போது ஈராக், சிரியா, ஜோர்டான், லெபனான் உள்ளிட்ட பகுதிகளில் ஹிஸ்புல்லா அமைப்பு தோன்றியது. சிரியா மற்றும் ஈராக்கில் துணை இராணுவக் குழுக்கள் மூலம் பயிற்சி மேற்கொண்ட ஹிஸ்புல்லா அமைப்பினர், ஈரானின் நேச நாட்டு போராளிகள் அமைப்புடன் நெருக்கமாக இருந்தனர்.

லெபனான் அரசியலில் கடந்த 30 வருடங்களாக தலையிட்டு வரும் ஹிஸ்புல்லா அமைப்பினர், கடந்த தேர்தலில் செல்வாக்கு இழந்தனர். இருந்தாலும், தெற்கு லெபனான் பகுதியில் பெரும்பாலான இடங்கள் ஹிஸ்புல்லா அமைப்பினரின் கட்டுப்பாட்டிலேயே உள்ளன.

ஹமாஸ், ஹவுத்தி, உள்ளிட்ட அமைப்புகளுடன் ஹிஸ்புல்லா நெருக்கமான தொடர்பில் இருந்து வருகிறது. 2006ஆம் ஆண்டு இஸ்ரேலுக்கும், ஹிஸ்புல்லா அமைப்பினருக்கும் இடையே மோதல் தொடங்கிய நிலையில் கடந்த 15 ஆண்டுகளுக்கும் மேலாக அவ்வப்போது பிரச்சினைகள் எல்லையில் நடந்து வருகின்றன.

இஸ்ரேல் - ஹமாஸ் போர் தொடங்கிய ஒக்டோபர் 7 ஆம் திகதி முதல் ஹிஸ்புல்லா அமைப்பினரும், வடக்கு இஸ்ரேல் பகுதியை நோக்கி தொடர்ச்சியாக ஏவுகணை தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

ஹமாஸுடன் காஸா பகுதியில் இஸ்ரேல் இராணுவம் போரிட்டு வரும் நிலையில் ஹிஸ்புல்லாவுக்கு எதிரான தாக்குதலையும் தீவிரப்படுத்தியுள்ளது. குறிப்பாக, வடக்கு இஸ்ரேலில் உள்ள யூதக் குடியிருப்புகளை குறிவைத்து தாக்குதல் நடத்த முயற்சி செய்யப்படும் நிலையில், பாதுகாப்பு காரணங்களுக்காக இஸ்ரேல் வடக்கு பகுதியில் உள்ள ஒரு லட்சம் யூதர்களை வேறு பகுதிக்கு இடமாற்றம் செய்துள்ளது.

ஹிஸ்புல்லா, இஸ்ரேலுடன் போரில் ஈடுபட நினைத்தால் அது இரண்டாவது லெபனான் போராக இருக்கும் என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பெஞ்சமின் நெதன்யாகுவின் கருத்தால் மத்திய கிழக்கு பிராந்தியத்தில் பதற்றம் மேலும் அதிகரித்துள்ளது. போர் தொடங்கிய நாளில் இருந்து இஸ்ரேல் தொடர்ச்சியாக லெபனான் மீது தாக்குதல் நடத்தி வருவதாகவும், ஐ.நா. தலையிட்டு அப்பாவி மக்கள் இறப்பதை தடுக்க வேண்டும் என்றும் லெபனான் வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது. ■


# அகம், புறம், சங்க(ம)ம்

# இல்லோர் ஒக்கல் தலைவன்



ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி

சமீபத்தில் மலையாள எழுத்தாளர் மனோஜ் குரூர் எழுதி, கே. வி. ஜெயஸ்ரீ தமிழில் மொழிபெயர்த்த 'நிலம் பூத்து மலர்ந்த நாள்' என்ற நாவலை வாசித்துக் கொண்டிருந்தேன். அந்த நாவல் பறம்பு நாட்டின் மண்ணின் வள்ளல் வேள்பாரி, மூவேந்தர்களின் சதியால் கொல்லப்படும் சம்பவத்தை மையமாகக் கொண்டு சுவாரசியமாக எழுதப்பட்டிருக்கும். வறுமையை நீக்க மன்னர்,புரவலரை நாடிச்சென்று பாடல்களை பாடும் மக்களின் வாழ்வை அடிப்படையாகக் கொண்டு சங்க காலப் புலவர்கள் கபிலர் மற்றும் பரணர் முதலான புலவர்களை இணைத்து திறமையாக மலையாளத்தில் எழுதப்பட்டிருக்கும் தமிழ் நாவல். நாவலில் ஒரு இடத்தில் பாணர்கள் கூட்டத்தைச் சேர்ந்த சித்திரை என்பவள் ,அவ்வையாரை சந்திக்கும் இடம் ஒன்று உண்டு. அப்பொழுது அவ்வை அதியமானுக்காக தொண்டைமானிடம் தூது சென்ற போது தான் பாடிய பாடலை நினைவுகூருகிறார்.



தொண்டை நாட்டின் மன்னன் தொண்டைமான் அதியமான் மீது பகை பாராட்டி போரிடும் முயற்சியில் இருந்தான். அதியமானின் படைவலிமையறியாத அவன் தன்னிடத்தே படைவலிமை அதிகமாக இருப்பதாக எண்ணி மிகவும் இறுமாப்புமிடனிருந்தான். தொண்டைமானின் அறியாமையை அறிந்த அதியமான், போர் நடைபெற்றால் தொண்டைமான்தோல்வி அடைவது உறுதி எனவும், அவன் உயிர் இழப்பது தடுக்க முடியாது என்பதையும் அவனுக்கு அறிவுறுத்துமாறு அவ்வையாரைத் தன் தூதுவராகத் தொண்டைமானிடம் அனுப்பினான். தன் படைவலிமையை எண்ணிச் செருக்கோடு இருந்த தொண்டைமானைக் காணச் சென்றார் அவ்வையார். அப்பொழுது தொண்டைமான், அவ்வையாரைத் தன் படைக்கலக் கொட்டிலுக்குஅழைத்துச் சென்று தன் படைக்கருவிகளைப் பெருமையோடு காண்பித்தான். அவன் எண்ணத்தை அறிந்த அவ்வையார் அவனுக்கு மறைமுகமாக புத்தி புகட்ட வேண்டி தொண்டைமானின் படைக்கலங்களைப் புகழ்வது போல் இகழ்ந்தும், அதியமானின் படைக்கலங்களை இகழ்வது போல் புகழ்ந்தும் வஞ்சப் புகழ்ச்சியணியில் இப்பாடலைப் பாடியதாக சித்திரையிடம் அவ்வையார் கூறுகிறார்.

**பாடப்பட்டோன்:** அதியமான் நெடுமான் அஞ்சி.

**திணை:** பாடாண் திணை. (பாடுதற்குரிய வேந்தரின்) சிறப்பியல்புகளைக் கூறி, அவனது வீரத்தையும் புகழையும் குடிப்பெருமையையும் கொடைவள்ளன்மையும் கல்வியறிவையும் செல்வத்தையும் குறித்துப் புகழ்ந்து பாடுவது )

**துறை :** வாண் மங்கலம் (போருக்கு எழும் அரசனின் வாளை வாழ்த்துவது வாள் மங்கலம் )

இவ்வே, பீலி அணிந்து மாலை சூட்டிக்
கண்திரள் நோன்காழ் திருத்தி, நெய்அணிந்து
கடியுடை வியன்நக ரவ்வே அவ்வே
பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து
கொல்துறைக் குற்றில மாதேர் என்றும்
உண்டாயின் பதம்கொடுத்து
இல்லாயின் உடன்உண்ணும்
இல்லோர் ஒக்கல் தலைவன்
அண்ணல்எம் கோமான் வைந்நுதி வேலே.

**அருஞ்சொற்பொருள்:-**

இவ்வே = இவையே, பீலி = மயில் தோகை, கண் = உடம்பு, திரள் = திரட்சி
நோன்மை = வலிமை, காழ் = காம்பு, திருத்துதல் = அழகு செய்தல், கடி = காவல்
வியன் = பரந்து விரிந்த , நகரம் = அரண்மனை, அவ்வே = அவையே
கோடு = பக்கம், நுதி = நுனி,கொல் = கொல்லன், துறை = இடம், குற்றில் = கொட்டில்
பதம் = உணவு, ஒக்கல் = சுற்றம், வை = கூர்மை.

**பாடலின் விளக்கம் :-**

தன்னிடம் இருந்தால் மற்றவர்களுக்கு அளித்த பிறகே தான் உண்ணுவதும், தன்னிடம் செல்வமில்லையேல், இருப்பதை பிறரோடு பகிர்ந்து உண்ணும் பண்புடையவன் அதியமான் நெடுமான் அஞ்சி . ஏழை எளிய மக்களை தன் உறவினர் போல் மதிக்கும் தலைவனாகிய பெருமை மிகு என் வேந்தன் அதியமானின் கூர்மையான வேல்கள், போர்க்களத்தில் தொடர்ந்து பகைவரைக் குத்தியதால் நுனிகள் முறிந்து கொல்லர்களின் உலைக்களத்தில் எந்நாளும் சரிசெய்வதற்காக அடுக்கப்பட்டிருக்கும். கொல்லர்களின் முக்கிய வேலையே முறிந்த வேல்களை சரி செய்வதே ஆனால் மன்னா! தொண்டைமானே உன் படைக்கருவிகளான பளிச்சென்று மின்னுகின்றன . மயில் தோகை போன்று சிறப்பாக அலங்காரம் செய்யப்பட்டு , மாலை சூடி , வலிய திரண்ட பிடிகளில் நெய் பூசப்பட்டு, அழகு மிளிர்ந்து , காவல் மிக்க இந்த படைக்கலத்தில் உயரிய இடத்தில் ஒய்யாரமாய் இருக்கின்றன. ( இதுநாள் வரை அந்த வேல்களுக்கு வேலையே வரவில்லை என்று நையாண்டி செய்கின்றார் ).

அவ்வையாரின் இந்த பாடலைக் கேட்ட சித்திரை, "இந்த பாடலை கேட்பவர் இது வாழ்த்துப்பாடல் எனவே புரிந்து கொள்வர். ஆனால் இது புகழ்வது போல இகழும் வஞ்சப்புகழ்ச்சி என்பதை தொண்டைமான் புரிந்து கொண்டானா?" என்று கேட்கிறாள். அதற்கு அவ்வையார் புன்னகைத்தபடியே "அதன்பின் தொண்டைமான் போர் தொடங்குவானா?. இதைக்கேட்ட அதியமான் என்னை பரிசில்களால் மூடினான்" என்று முடிக்கிறார்.



# 2500 பேர் விண்ணப்பம் 500 பேருக்கே அனுமதி

2 ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட ஆஸ்திரேலியர்கள், வெளிநாட்டு இராணுவம் அல்லது அரச அமைப்புகளில் பணியாற்றுவதற்கு அனுமதிகோரி பாதுகாப்பு அமைச்சுக்கு விண்ணப்பித்துள்ளனர்.



ஆஸ்திரேலிய இராணுவ இரகசியங்களை பாதுகாப்பதற்காக வடிவமைக்கப்பட்ட புதிய சட்ட ஏற்பாடுகளுக்கு அமையவே இவர்கள் விண்ணப்பித்துள்ளனர்.

ஆஸ்திரேலியாவின் முன்னாள் படை அதிகாரிகள், சீன படைகளுக்கு பயிற்சி அளித்திருக்கலாம் என்ற சர்ச்சை வந்த பின்னரே, ஆஸ்திரேலியர்கள் வெளிநாட்டு படைகளில் பணியாற்றும் விவகாரம் தொடர்பில் - கடும் கட்டுப்பாடுகளுடன் அவசர சட்டம் இயற்றப்பட்டது.

இதன்படி ஆஸ்திரேலியாவின் முன்னாள் படையினர் மற்றும் பாதுகாப்பு ஊழியர்கள் வெளிநாட்டு படைகளில் பணியாற்றுவதெனில் அதற்கு அரசின் அனுமதி கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நடைமுறைகளுக்கு அமையவே 2 ஆயிரத்து 500 பேர் விண்ணப்பித்துள்ளனர் எனவும், இதில் 500 பேருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளன எனவும் தெரியவருகின்றது.

# பூர்வகுடிப் பெண்ணுக்கு பெருமை

Northern Territory எதிர்க்கட்சி தலைவராக பூர்வகுடி பெண்ணான Selena Uibo நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆஸ்திரேலிய வரலாற்றில் மிகப்பெரிய அரசியல் கட்சியொன்றுக்கு தலைமை தாங்கும் முதல் பூர்வகுடி பெண் என்ற பெருமையை இதன்மூலம் அவர் பெற்றுள்ளார்.

Northern Territory ஐ, லேபர் கட்சி ஆண்ட நிலையில், அண்மையில் நடைபெற்ற தேர்தலில் அந்தக்கட்சி தோல்வியடைந்தது.

17 ஆசனங்களைக்கொண்ட நாடாளுமன்றத்தில் லேபர் கட்சிக்கு நான்கு ஆசனங்கள் கிடைக்கப்பெற்றன. இந்நிலையிலேயே எதிர்க்கட்சி தலைவராக Selena Uibo நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த அரசில் அவர் சுகாதார அமைச்சராக பதவி வகித்தார். துணை எதிர்க்கட்சித் தலைவராக Dheran Young நியமிக்கப்பட்டுள்ளார்.



லேபர் கட்சி ஆட்சியில் முதல்வராக இருந்த Eva Lawler பதவி இறக்கப்பட்டுள்ளார். இதன்படி மாநிலத்தில் லேபர் கட்சியை வழி நடத்தவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கடுமையாகும் தண்டனைகள்



குடும்ப வன்முறையில் ஈடுபடும் நபர்களுக்கு எதிராக கடுமையான தண்டனைகளை வழங்குவதற்கு வழிவகுக்கும் சட்டமூலம் நியூ சவூத் வேல்ஸ் மாநில நாடாளுமன்றத்தில் இம்மாதம் முன்வைக்கப்படவுள்ளது.

இச்சட்டத்தின் பிரகாரம் மீண்டும், மீண்டும் குடும்ப வன்முறைகளில் ஈடுபடும் நபர்களுக்கு சிறை தண்டனை மற்றும் அபராதம் விதிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

குறிப்பாக பிணை நிபந்தனைகளைமீறும் சந்தேக நபர்களுக்கு மூன்று ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்படும் என்பதுடன், 11 ஆயிரத்து 500 டொலர் அபராதம் விதிக்கப்படும்.

அதேபோல 28 நாட்களுக்குள் தெரிந்தே மூன்றுக்கு மேற்பட்ட தடவைகள் நிபந்தனைகளை மீறினால் 5 ஆண்டுகள் சிறை தண்டனையும், 16, 500 டொலர் அபராதம் விதிக்கப்படும்.

பிணை நிபந்தனைகளை மீறினால் தற்போது ஈராண்டுகள் சிறை மற்றும் 5 ஆயிரம் டொலர் அபராதம் விதிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அதிருப்தி எதிரொலிக்கும்



இஸ்ரேல் - காஸா போர் விவகாரம் ஆஸ்திரேலிய கூட்டாட்சி தேர்தலிலும் எதிரொலிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

காஸாவில் இடம்பெற்றுவரும் மனித குலத்துக்கு எதிரான செயற்பாடுகள் தொடர்பில் லேபர் அரசின் அணுகுமுறை குறித்து முஸ்லிம் சமூகம் மத்தியில் கடும் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் சிறுபான்மை சமூகங்களை அணிதிரட்டும் பிரசாரத்தை எனும் அமைப்பு ஆரம்பித்துள்ளது.

"சமூகத்தின் கருத்துகளை அரசு செவிமடுக்காததால் முஸ்லிம் மக்கள் அதிருப்தியடைந்துள்ளனர்." என்று அமைப்பின் தேசிய செய்தித் தொடர்பாளர் Ghaith Krayem தெரிவித்தார்.

"அரசியல் ரீதியாக முஸ்லிம் சமூகம் ஓரங்கப்பட்டுவருகின்றது." எனவும் அவர் கூறினார்.

ஆஸ்திரேலியாவில் 20 க்கும் மேற்பட்ட தொகுதிகளில் தீர்மானிக்கும் சக்தியாக முஸ்லிம் வாக்குகள் உள்ளன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கூட்டாட்சி தேர்தல் எதிர்வரும் மே மாதம் நடைறெவுள்ள நிலையில், அதற்கான முன்னாயத்த நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்றுவருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

# புகலிடக்கோரிக்கையாளர்களுக்கு புதிய சட்டம்

ஆஸ்திரேலிய அரசாங்கம், புகலிடக்கோரிக்கையாளர்களை 90 நாட்களுக்கு மேலாக தடுத்து வைப்பதை சட்டவிரோத நடவடிக்கையாகக் கருதவேண்டும் எனக்கோரும் சட்டமூலம் முன்வைக்கப்பட்டுள்ளது.

சுயாதீன செனட்டர் Kylea Tink என்பவரால் மேற்படி சட்டமூலம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது.

இதன்படி தடுப்பு மையங்களில் குழந்தைகள் தடுத்து வைக்கப்படுவதும் சட்டவிரோத நடவடிக்கையாக கருதப்பட வேண்டும் என முன்மொழியப்பட்டுள்ளது.

" ஆஸ்திரேலியாவானது சர்வதேச மனித உரிமைக் கடமைகளுக்கு இணங்குவதை உறுதி செய்வதற்காகவே சட்டதிருத்தம் முன்வைக்கப்பட்டுள்ளது." என்று நாடாளுமன்ற உறுப்பினர் Kylea Tink குறிப்பிட்டுள்ளார்.



சர்வதேச மனித உரிமைகளை பாதுகாப்பதில் ஆஸ்திரேலியாவுக்கு உலகளவில் மோசமான பெயரே உள்ளது எனவும், இந்நிலை மாற வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உள்நாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் தகவல்களின் அடிப்படையில் 900 வரையானோர் தடுப்பு மையங்களில் உள்ளனர் என தெரியவருகின்றது.

# ஆஸிக்கு தலைமைத்துவம்

செங்கடல் கப்பல் போக்குவரத்து வழித்தடங்களை பாதுகாப்பதற்கான சர்வதேச கூட்டுப் பாதுகாப்பு நடவடிக்கைக்கு ஆஸ்திரேலியா தலைமைத்துவம் வகிக்கவுள்ளது.

எதிர்வரும் ஒக்ரோபர் முதல் ஆறு மாதங்களுக்கு இவ்வாறு ஆஸ்திரேலியா இந்தத் தலைமைப்பதவியை வகிக்கும் என்று பாதுகாப்பு துறை அறிவித்துள்ளது.

சர்வதேச கப்பல் போக்குவரத்தில் செங்கடல் பகுதி மிக முக்கியமானதாகக் கருதப்படுகின்றது.

மத்திய கிழக்கில் போர்ப் பதற்றம் ஏற்பட்டுள்ள நிலையில், செங்கடல் பகுதியில் வணிக கப்பல்கள்மீது உழரவான கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்திவருகின்றனர்.

இதனால் செங்கடல் பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. அமெரிக்கா, இங்கிலாந்து உட்பட பல நாடுகள் கூட்டாகப் பாதுகாப்பு திட்டத்தை செயற்படுத்தி வருகின்றன.

செங்கடலுக்கு போர்க்கப்பலொன்றை அனுப்புமாறு அமெரிக்கா விடுத்த கோரிக்கையை ஆஸ்திரேலியா நிராகரித்திருந்தது.

இந்நிலையில் பாதுகாப்பு நடவடிக்கைக்கு தலைமையேற்கும் ஆஸ்திரேலியா, மத்திய கிழக்கில் உள்ள தமது நாட்டுப் படையினரையே அதற்காக பயன்படுத்தவுள்ளது.



# நிரந்தர வதிவிடம் கோரி புலம்பெயர் தமிழர்களால் பல்வேறு நகரங்களில் நடத்தப்படும் போராட்டங்கள்

பேர்த்தில்...




அடிலெய்டில்...







பிரிஸ்பேர்னில்...




மெல்பேர்னில்...



# தமிழின் நாகரத்தினம் – கொட்டுக்காளி

● ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி




சின்ன வயதில் பாட்டிமார்களின் கதை கேட்டு வளர்ந்தவர்களுக்கு நன்றாக தெரியும். ஒவ்வொரு ஊரிலும் பல புராதன கதைகளை பாட்டிமார்கள் சொல்வார்கள். இப்பொழுதெல்லாம் பாட்டிமார்கள் கதைகளையெல்லாம் சொல்வதில்லை. அப்படியே சொன்னாலும் குழந்தைகள் அவற்றையெல்லாம் கேட்கும் நிலையிலும் இல்லை. எனது பாட்டியவர்கள் பாம்புக்கதைகள் நிறைய சொல்வார் . அப்படியான ஒரு கதையில் வரும் பாம்பு தனது வயிற்றில் பல காலம் தனது சக்தியையெல்லாம் (விஷம்) அடைகாத்து வைத்திருந்து தனது வயதான காலத்தில் அதனை கக்கி ( நாகரத்தினம்) அந்த ஒளியில் தனது இரையை தேடும் . அந்த ஒளியை நாம் நோக்கினால் நமது கண் பார்வை போய்விடும் என்றெல்லாம் கதை சொல்வார்கள். அப்பொழுதெல்லாம் அந்த கதைகளை எல்லாம் சரி பார்க்க இணையம் எல்லாம் கிடையாது. எல்லாமே உண்மை. எல்லாமே கதைகள். இத்தனை வருடம் கழித்து என் மனதில் கற்பனை செய்து வைத்திருந்த நாகரத்தினத்தின் ஒளியை பார்க்கும் வாய்ப்பு கிடைத்ததில்லை. என் கனவு பல வருடங்கள் கழித்து இப்பொழுது நிறைவேறியிருக்கிறது. இயக்குனர் பி.எஸ் வினோத் ராஜ் தனது மடியில் இத்துணை காலம் அடைகாத்து வைத்திருந்த நாகரத்தினத்தை தமிழ்திரையில் கக்கியிருக்கிறார். அதன் உண்மை வெளிச்சத்தில் நமது கண்கள் கூசுகின்றன. உண்மையின் அதி தீவிர வெளிச்சம் தான் அந்த நாகரத்தினம். எத்தனை வருடம் ஆயிற்று இது போன்ற ஒரு உலகத்தரம் வாய்ந்த தமிழ்ப்படம் பார்த்து . அந்த திரைப்படம் பார்த்த அனுபவத்தை வார்த்தைகளில் எல்லாம் என்னால் எழுதவே முடியாது . அப்படி எழுத முடியுமென்றால் இயக்குனரே வார்த்தைகளில் எழுதியிருப்பார் இல்லையா?. திரைமொழியில் எழுதப்பட்ட காவியம் தான் கொட்டுக்காளி .

எனது அலுவலக நண்பன் ஒரு ஈரானியன். அவனும் நானும் உலக சினிமாக்களை பற்றி பேசிக்கொள்ளும் பொழுது இந்திய மொழியில் சிறந்த திரைப்படங்கள் என்று சத்யஜித் ரேவின் படங்களை பரிந்துரைப்பேன். அப்பொழுது நமது தாய்மொழியான தமிழ் மொழியில் சிறந்த படங்கள் இல்லையா ? என்று கேட்பான் . அப்பொழுதெல்லாம் நான் உதிரிப்பூக்கள் ,வீடு போன்ற படங்களை பரிந்துரைப்பேன். புதிய திரைப்படங்கள் எதாவது இருக்கிறதா என்றெல்லாம் கிடக்கும்போது விழி பிதுங்கி நிற்பேன். இப்பொழுது அந்த பயம் எனக்கு இப்போது இல்லை. இயக்குனர் பி.எஸ் வினோத் ராஜ் படங்களை பரிந்துரைப்பேன் . எங்களாலும் உலகத்தரம் வாய்ந்த தமிழ்ப்படம் எடுக்க முடியுமென்று என்று பெருமையாக மார்தட்டி வைக்க வைத்திருக்கிறார். சத்தியஜித்ரேவின் சாருலதா படம் பார்த்துவிட்டு அந்த இறுதிகாட்சியில் உறைந்து போயிருந்தேன். அதன்பிறகு அந்த அளவிற்கு என்னை உறையச்செய்த தமிழின் ஆகச்சிறந்த படம் . கொட்டுக்காளி.

சினிமா என்பது காட்சிகளின் மொழி அல்லவா ? . நான் திரைப்படம் பார்க்கும்பொழுது கிடைக்கும் அனுபவம் மற்றவருக்கும் கிடைக்கும் என்று எவ்வாறு சொல்ல முடியும் ? அவ்வாறென்றால் எந்த காரணங்களையெல்லாம் வைத்து ஒரு திரைப்படத்தை தலைசிறந்த திரைப்படம் என்று வரையறுக்க முடியும். சில காலம் உலக சினிமாக்களை பார்த்தவன் என்று அனுபவத்தில் சில காரணிகளை சொல்லிவிட்டு அதன் மூலம் ஏன் இந்த திரைப்படம் சிறந்து விளங்குகிறது என்று விளக்கலாம் என்று நினைக்கிறேன். ஒரு திரைப்படம் உலக அளவில் சிறந்து விளங்க முக்கியமாக ஐந்து விஷயங்கள் இருக்க வேண்டும் .

1. அழுத்தமான கதை சொல்லல்
2. மகத்தான இயக்கம்
3. ஆகச் சிறந்த நடிப்பு
4. அசல் மற்றும் படைப்பூக்கம்
5. கலாச்சார மற்றும் வரலாற்று முக்கியத்துவம் ஆகியவை ஆகும் .

அழுத்தமான கதை சொல்லல் என்பது ஏன் முக்கியம்? . நீங்கள் ஒரு சிறுகதையோ அல்லது நாவலோ வாசிக்கிறீர்கள். அப்பொழுது உங்களுக்கு கிடைக்கும் நினைவெழுச்சி என்பது அந்த கதாபாத்திரங்களையும் ,சம்பவங்களையும் கொண்டு மனதில் எழுப்பும் கற்பனை பிம்பங்கள் மூலம் கிடைப்பவை. அதை நீங்கள் மற்றவருக்கு விளக்க முடியாது. ஒரு திரைப்பட இயக்குனருக்கு இதுவே வரப்பிரசாதம் மற்றும் சாபமும் கூட. காட்சிகளைக் கொண்டு அழுத்தமாக கதை சொல்லல். பக்க பக்கமாக வசனம் சொல்லாமல் காட்சிகள் மூலம் சொல்லுவது. படம் தொடங்கிய பத்தாவது நிமிடத்தில் அழுத்தமாக கதையின் பின்புலம் என்பதை மிகத்தெளிவாக விளக்கி விடுகிறார். கொஞ்சம் கொஞ்சமாக கதாபாத்திரங்களின் வழியே மிகத் தெளிவாக தான் சொல்ல வேண்டியதை சொல்லி விடுகிறார். உதாரணமாக ஒரு காட்சியை சொல்லி விடுகிறேன். கதாநாயகன் ( சூரி ) , கதாநாயகி ( அன்னா பென் ) மற்றும் உறவினர்கள் எல்லாம் ஒரு பூசாரியை பார்க்க வேண்டி பயணம் செய்கின்றனர். அப்பொழுது கதாநாயகி ஒரு தடுத்துநிறுத்தி வைக்கப்பட்ட ஆற்றின் குறுக்கே துள்ளி குதித்து ஓடுவது போல் எண்ணிக்கொள்கிறாள் . பல்லாயிரம் ஆண்டுகளாக அடிமையாக்கி வைத்த உக்கிரம் படைத்த காளி ( பெண் இனம்) ஆற்றின் இந்த பக்கம் தடுத்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ளார். ஒரு நிமிடம் போதும் அடித்து துவம்சம் பண்ண ? .

அடுத்ததாக நாம் குறிப்பிட்டே ஆக வேண்டிய விஷயம் பி.எஸ் .வினோத் ராஜ் அவர்களின் மகத்தான இயக்கம். ஒன்றரை மணி நேரம் ஓடும் திரைப்படத்தில் ஒரு காட்சியைக் கூட தேவையில்லாத காட்சி என்று சொல்ல முடியாது. சொல்ல வந்த விஷயத்தை அழுத்தமாக காட்சிகளின் மூலம் பார்ப்பவர்களின் மனதில் ஏற்றி விடுவது மிக இலகுவான காரியம் கிடையாது. ஏனென்று சொல்வதற்கு படத்தில் வரும் ஒன்றிரண்டு காட்சிகளை குறிப்பிடுகிறேன். படம் முழுவதும் சேவல் ஒன்றை படிமமாக பயன்படுத்தியிருக்கிறார். சேவலை நன்றாக உணவளித்து வளர்ப்பார்கள் .ஆனால் எப்பொழுதும் வீட்டிற்கும் கட்டி வைத்திருப்பார்கள். சேவலுக்கு ஒன்றென்றால் பதறிப்போவார்கள். ஒரு காட்சியில் மயங்கி விழுந்த சேவலை அவ்வளவு கண்ணும் கருத்துமாக பார்த்துக்கொள்வார்கள். கடைசியில் அந்த சேவலுக்கு என்ன கதி ? . கழுத்தை அறுத்து எறிவது தான். இங்கு சேவல் என்பது இவர்கள் வீட்டில் வளரும் பெண்கள் என்பது குறியீடு.இறுதிக்காட்சியில் வரிசையாக பூசாரிக்காக காத்திருக்கும் ஒவ்வொருவரின் கையிலும் ஒரு சேவல். இங்கே ஒரு அத்தை மகன் ( சூரி ) தனது முறைப்பெண்ணை மீட்டெடுக்க பூசாரியை நோக்கி செல்லும் வழியில் இன்னொரு அத்தை மகன் தனது முறைப்பெண்ணின் பூப்புனித நீராட்டு விழாவுக்கு கனவுகளுடன் தயாராகிறான் . இது முடியாது .தொடர்ந்து நடப்பது தான் என்பதை காட்சிகளால் நமக்கு பதிய வைத்து விடுகிறார், மீனா ( அன்னா பென் ) விடம் தண்ணீர் கொடுத்து குடிக்க சொல்லும்போது அவளது அம்மா , “தண்ணீர் குடிம்மா ,அடி வாங்குவதற்கு தெம்பு வேணும்ல” என்று சொல்வாள் .அப்பொழுது மீனா, “அவர்கள் என்னை அடிக்க மட்டும் செய்யவில்லை” என்கிறாள். மொத்த படத்திலும் இந்த ஒரே ஒரு வாக்கியம் மட்டுமே கொட்டுக்காளி பேசுகிறாள். மொத்த படமே ஒரு வாக்கியத்தில் நமக்கு புரிய வைத்துவிடுகிறார் இயக்குனர்.

எந்த ஒரு திரைப்படமும் முழுமையடைவது கதாபாத்திரங்களின் நடிப்பால். இந்த படத்தில் வரும் அனைவரும் வாழ்ந்து காட்டியிருக்கின்றனர்.சூரி ,அன்னா பென் என இருவரும் பாண்டி மற்றும் மீனவாக வாழ்ந்து காட்டியிருக்கின்றனர். ஒரு காட்சியில் குலதெய்வம் கோயிலில் எல்லோரும் சாமி கும்பிட்டு சென்ற பிறகு , மீனா தனியாக சாமி கும்பிடுவாள் .அதனை பாண்டி பார்ப்பான். அப்பொழுது பாண்டியாக வரும் மனிதனின் உணர்வுகளை (தனது அத்தை மகள் வேறு ஒருவனை நினைத்து சாமி கும்பிடுகிறாளே என்பதை நினைத்து வரும் கையறு நிலை) மற்றும் இறுதி காட்சியில் அங்கே நடக்கும் சடங்குகளை பார்த்து திகைத்து தடுமாறும் நிலை என்று பாண்டியாக வாழ்ந்திருக்கிறார். மீனா படம் முழுவதும் அழுத்தமான பெண்ணாக வருகிறாள் . பாண்டியிடம் அடி வாங்கிய பிறகு தனது முகத்தை கண்ணாடியில் சரி செய்யும் காட்சியில் அவரது மனவோட்டத்தை தனது கண்களில் பிரதிபலிக்கிறார். அப்பொழுது அங்கே தனக்கு அருகே அமர்ந்துள்ள சிறுவனை பார்த்து சிரிக்கிறாள். ஒட்டு மொத்த ஆண் வர்க்கத்தை பார்த்து சிரிக்கும் அந்த சிரிப்பு . மற்றோரு காட்சியில் சூரியிடம் அடி வாங்கும்பொழுது கேமரா மேலிருந்து அவரை காட்டும். ஒரு நிமிர்ந்த காளை போல நெஞ்சை நிமிர்த்துக்கொண்டு நிற்பாள். நீ யாருடா என்னை அடிக்க என்பது போல .எந்த வசனங்களுமின்றி தனது உணர்ச்சிகளை முகம் மற்றும் உடல்மொழி மூலம் படத்தினால் வெகு கச்சிதமாக வெளிப்படுத்தியிருக்கிறார் அன்னா பென் . ஒவ்வொரு கதாபாத்திரமும் அவரவர் பாத்திரங்களை வெகு நேர்த்தியாக வெளிப்படுத்தியிருக்கின்றனர். குறிப்பாக சூரியின் இரண்டு தங்கைகள்.

இயக்குனர் வினோத்ராஜ் ஒரு பேட்டியில் “எனது வாழ்வில் எவ்வளவோ குழப்பங்கள் ,கொந்தளிப்புகள் . ஆனால் எனது மொழியில் வரும் திரைப்படங்கள் எங்களது வாழ்வையும் இங்கே இருக்கும் பிரச்சினைகளையும் சொல்வதில்லையே . இதெல்லாம் பற்றி எனது திரைப்படங்கள் பேசவேண்டும்” என்று ஆசைப்பட்டேன் என்று சொல்லியிருக்கிறார். இவரது இரண்டு படங்களுமே (கூழாங்கல் மற்றும் கொட்டுக்காளி) இங்குள்ள அச்சு அசலான மக்களின் வாழ்வை பேசும் படைப்பூக்கம் மிளிரும் படங்கள். இங்கே சூரியின் கதாபாத்திர வார்ப்பை நான் குறிப்பிட்டே ஆக வேண்டும். படம் தொடக்கத்தில் இருந்து கோபத்தில் எல்லோரையும் அடிக்கிறான் அல்லது காளை போல திமிர்கின்றான் . அதே நேரம் அன்பில் உருகுகின்றான். தனது நண்பனின் அப்பாவை கேட்பதாகட்டும் ,இறுதியில் பூசாரி நடத்தும் சடங்குகளைப் பார்த்து அதிர்ச்சியடைவதாகட்டும் ஒரு மனிதனை அவன் இயல்பை அப்படியே காட்டுவது தானே உயர்ந்த படைப்பு. வளர்ச்சியடைந்த ,பொருளாதாரரத்தில் மேம்பாடடைந்த சமூகம் என்றெல்லாம் நாம் பீற்றிக்கொண்டிருக்கிறோம் அல்லவா . இதுதான் பொன்னகரம் என்று நமது முகத்தில் பளீரென்று உண்மையை வெளிச்சம் போட்டு காட்டுகிறார் இயக்குனர் .

இறுதியாக இந்த திரைப்படம் காட்டும் நமது வாழ்வு மற்றும் கலாச்சாரம். பல்லாயிரம் ஆண்டுகள் ஆனாலும் நமது மூட பழக்க வழக்கங்கள் மறைவதில்லை. ஏனென்று நாம் யோசித்து பார்த்தோமானால் ,நமக்கு பெண்களை அடக்கி ஆள வேண்டும் .அதற்கு தொடர்ந்து நமது மூட பழக்க வழக்கங்களை கண்மூடித்தனமாக பின்பற்ற இந்த சமூகம் நம்மை தொடர்ந்து தொந்தரவு செய்கிறது. ஒரு பக்கம் பெண்கள் மாதவிடாய்க்கு நாப்கின்கள் பயன்படுத்தினாலும் அவர்கள் தங்களது குலதெய்வம் இருக்கும் திசையை கூட நோக்க முடியாது தங்களது மாதவிடாய் நாட்களில். நவீனத்தின் அத்துணை வசதிகளை பயன்படுத்தினாலும் (அலைபேசி ,நவீன கார்) ஒரு பெண்ணிற்கு தனக்கு பிரியமான துணையை தேர்ந்தெடுக்க இன்னும் நம் கிராமங்களில் சுதந்திரம் வந்துவிடவில்லை என்பதை தான் இந்த படம் சொல்லுகிறது. பூப்புனித நீராட்டு விழாக்கள் என்பது நமது பெண்ணினத்திற்கு செய்யும் வரலாற்று துரோகம். படத்தின் இறுதிக்காட்சியில் வரும் ஆணாதிக்க சாமியார் செய்யும் செய்வினை இறக்க சடங்கு நமது உச்சகட்ட ஆணாதிக்க நிலையை எடுத்துக்காட்டுகிறது

நல்ல சிறுகதையோ அல்லது திரைப்படமோ முடிவதில்லை என்று தான் நினைக்கிறன். திரைப்படம் எங்கு முடிகிறதோ அந்த இடத்திலிருந்து தொடங்க வேண்டும். பார்வையாளனை தொடர்ந்து கேள்வி எழுப்ப வேண்டும். அவனோடு தொடர்ந்து உரையாட வேண்டும். வினோத் ராஜின் இந்த திரைப்படம் நம்மை தொடர்ந்து கேள்வி கேட்கிறது .அதிர்ச்சியில் உறைய வைக்கிறது. இந்த திரைப்படத்தில் அவர் எந்த கதாபாத்திரங்களுக்கும் நல்லவர் / கெட்டவர் என்று வகைப்படுத்துவதில்லை. படத்தின் தொடக்கத்திலேயே “எல்லாவற்றுக்கும் இயற்கைக்கு நன்றி” என்று சொல்லிவிடுகிறார். இங்கு மனிதர்கள் செய்யும் எல்லாவற்றிற்கும் சூழலே பொறுப்பு என்கிறார். இறுதியாக இந்த திரையனுபவ கட்டுரையை முடித்து க்கொள்வதற்கு வாசுகி கணேசானந்தன் வரிகளை துணைக்கு அழைக்கிறேன் . “இந்த கதைக்கு ஒரு ஆரம்பம், அல்லது ஒரு முடிவு இருக்கிறது என்று சொன்னால் அதைவிட ஒரு முழுப்பொய் இருக்க முடியாது.. நளினமான வார்த்தைகளுக்கு எங்கள் கதைகளில் இடமில்லை .எங்கள் வாழ்க்கையொன்றும் நீங்கள் நினைப்பதுபோல் பரிசுத்தமாக இல்லை. அவை ஆரவாரமின்றி தொடங்கி எச்சரிக்கையின்றி முடிவடைகின்றன.இந்தக் கதைக்கு வரையறுக்கப்பட்ட வடிவமோ அல்லது இனிமையான திருப்பங்களோ இல்லை. இந்தக் கதையை வேறு எந்த விதமாகவும் பதிவு செய்தால் உண்மையாக இருக்க போவதில்லை.”

Transsco CARGO

THIS YEAR CHRISTMAS WILL BE AWESOME

| Month | Final Cut Off Date | Estimated Arrival Date |
|---|---|---|
| August | 2024 -08 - 03 | 2024 - 09 - 13 |
| August | 2024 - 08 - 10 | 2024 - 09 - 20 |
| August | 2024 - 08 - 17 | 2024 - 09 - 27 |
| August | 2024 - 08 - 24 | 2024 - 10 - 04 |
| August | 2024- 08 - 31 | 2024 - 10 - 11 |
| September | 2024 - 09 - 07 | 2024 - 10 - 18 |
| September | 2024 - 09 - 14 | 2024 - 10 - 25 |
| September | 2024 - 09 - 21 | 2024 - 11 - 01 |
| September | 2024 - 09 - 28 | 2024 - 11 - 08 |
| October | 2024 - 10 - 05 | 2024 - 11 - 15 |
| October | 2024 - 10 - 12 | 2024 - 11 - 22 |
| October | 2024 - 10 - 19 | 2024 - 11 - 29 |
| October | 2024 - 10 - 26 | 2024 - 12 - 06 |
| November | 2024 - 11 - 02 | 2024 - 12 - 13 |
| November | 2024 - 11 - 09 | 2024 - 12 - 20 |
| November | 2024 - 11 - 16 | 2024 - 12 - 27 |
| November | 2024 - 11 - 23 | 2025 - 01 - 03 |
| November | 2024 - 11 - 30 | 2025 - 01 - 10 |
| December | 2024 - 12 - 07 | 2025 - 01 - 17 |
| December | 2024 - 12 - 14 | 2025 - 01 - 24 |
| December | 2024 - 12 - 21 | 2025 - 01 - 31 |



Now We do Air Tickets



Transco TRAVELS

LIONXPRESS

Your Essentials to Sri Lanka

Within 7 Days?



45 Adrian Rd, CAMPBELLFIELD - (03) 9357 7228

206-208 Discovery Road, DANDENONG SOUTH - (03) 9703 2255

follow us on

We love to deliver

SYDNEY - 02 9897 0004 | BRISBANE - 07 3219 0203 | ADELAIDE - 08 8322 8825 | PERTH - 08 9452 7707 | CANBERRA - 02 62821905 | DARWIN - 08 79790002 | TASMANIA - 03 90174167

1300 1 TRANSCO (1300 187 267) | WWW.TRANSCOCARGO.COM.AU